பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 சித்திரை 30 புதன்கிழமை (13.05.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 168

# ஆஸ்பத்திரி மீதான தாக்குதலில்

# 47 பொதுமக்கள் பலி! 56 பேர் காயம்!

## நிர்வாக அதிகாரியும் மரணம்; டாக்டர் அருந்தப்பு

கொழும்பு, மே 13

அரசாங்கத்தால் கடந்த வாரம் புதிதாக அறிவிக்கப்பட்ட மக்கள் பாதுகாப்பு வலயத்தில், முள்ளிவாய்க்காலில், தற்காலிகமாக இயங்கிய ஆஸ்பத்திரி மீது நேற்றுக் காலை 2 ஆவது தடவையாக நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் 49 பொதுமக்கள் பலியானார்கள்! 56பேர் காயமுற்றனர்!!

ஆஸ்பத்திரியின் நிர்வாக அதிகாரியான கே.தர்மகுலசிங்கமும் மரணமானார். டாக்டர் துரைராஜா வரதராஜா அதிர்ஷ்டவசமாகத் தப்பினார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## கரையான் முள்ளிவாய்க்காலில் புலிகள் தற்கொலைத் தாக்குதல்

கொழும்பு, மே 13

முல்லைத்தீவு, கரையான்முள்ளிவாய்க்கால் பகுதியில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினர் மீது நேற்று விடுதலைப் புலிகள் மூன்று தடவைகள் தற்கொலைத் தாக்குதல்களை நடத்தினர் எனப் படைத் தரப்பில் கூறப்பட்டது.

இத்தாக்குதலில் இராணுவத்தினர் காய மடைந்தனர். அவர்கள் உடனடியாக வைத்தி

(16ஆம் பக்கம் பார்க்க)

## அரச படைகள் கனரக ஆயுதங்களைப் பாவிக்கின்றன; புலிகள் மக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்துகின்றனர்

### தம்மிடம் சான்றுகள் உள்ளன என்கிறது ஐ.நா.

கொழும்பு, மே 13

"வன்னியில் இலங்கை அரச படைகள் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்துகின்றனர் என்பதற்கும் அதேபோல் விடுதலைப் புலிகள் பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்துகின்றனர் என்பதற்கும் சான்றுகள் உள்ளன.

- இவ்வாறு ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான விடயங்களுக்கான ஆணையாளர் ஜோன் ஹோம்ஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

மிகவும் தாமதமான இந்தத் தருணத்தைக் கூட இரு தரப்புகளும் முடியும் பட்சத்தில் மோதலுக்கு சமாதான வழிமுறை ஒன்றைக் கண்டு

(16ஆம் பக்கம் பார்க்க)



## புலிகளின் தாக்குதல் வலுவை 48 மணி நேரத்தில் படையினர் முற்றாக இல்லாது ஒழித்து விடுவர்

### பாதுகாப்புச் செயலர் திட்டவட்டம்

புதுடில்லி, மே 13

விடுதலைப் புலிகளின் தாக்குதல் சக்தியை இன்னும் 48 மணி நேரத்தில் இராணுவத்தினர் இல்லாமல் செய்து விடுவர் என்று பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ இந்திய அரச தொலைக்காட்சியான தூர்தர்ஷனுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

நேற்றுக் காலையில் இது குறித்துத் தெரிவித்த பாதுகாப்புச் செயலாளர் -

இராணுவத்தின் உயர்மட்ட அதிகாரிகளிடம் இருந்து கிடைக்கப்பெறுகின்ற தகவல்களின் அடிப்படையில் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தினுள் (16ஆம் பக்கம் பார்க்க)

## உதவிப்பொருள்களுடன் சென்ற கப்பல் அவற்றை இறக்காது திரும்பியது

கொழும்பு, மே 13

முல்லைத்தீவுக்கு உதவிப் பொருள்களுடன் சென்ற கப்பல் அங்கு இடம்பெறும் கடும் சண்டை காரணமாக பொருள்களை இறக்காமலேயே திருகோணமலைக்கு திரும்பிக்கொண்டிருக்கின்றது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் அதி

(16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழகத்திலும் புதுவையிலும் இன்று மக்களவைத் தேர்தல்; வெற்றியைத் தீர்மானிக்கும் சக்தியாக ஈழத்தமிழர் விவகாரம்

கொழும்பு, மே 13

ஈழத் தமிழர்களின் அவலம் குறித்த உணர்வுகள் தீவிரமடைந்து தேர்தல் பிரசாரத்திலும் முக்கிய இடத்தைப் பிடித்திருந்ததொரு சூழ்நிலையில் இன்று தமிழ்நாட்டில் மக்களவைத் தேர்தல் நடைபெறுகின்றது.

தமிழகத் தேர்தல் முடிவுகளைத் தீர்மானிக்கும் தீர்க்கமான சக்தியாக ஈழத் தமிழர் விவகாரம் மாறியுள்ளதன் காரணமாக தமிழகத்தில் மாத்திரமன்றி, இலங்கையிலும் ஆவலுடன் எதிர்பார்க்கப்படும் விடயமாக இன்றைய வாக்களிப்பு மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தியாவின் 15 ஆவது மக்களவைத் தேர்தல் 5 கட்டங்களாக நடைபெறுகிறது. ஏற்கனவே 4 கட்டங்களில் வாக்குப் பதிவுகள் முடிவு பெற்று 5 ஆம் கட்ட வாக்குப் பதிவு இன்று (13 ஆம் திகதி) நடைபெறுகிறது. (16ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை விவகாரத்தைப் பாதுகாப்புச் சபையில் விவாதிப்பது அவசியமென 3 நாடுகள் வலியுறுத்து

கொழும்பு, மே 12

ஐ. நா. பாதுகாப்புச் சபையில் இலங்கை குறித்து விவாதிக்கப்படுவது அவசியமென பிரிட்டன், பிரான்ஸ், ஒஸ்ரியா ஆகிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் கூட்டாக வலியுறுத்தியுள்ளனர்.

இலங்கை குறித்து உத்தியோகப்பற்றற்ற விதத்தில் ஆராய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் சாத்தியமாகாததைத் தொடர்ந்தே இவர்கள் இக்கருத்தை வலியுறுத்தியுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபை ஆராயவேண்டிய விடயம் இதுவென்பது குறித்து நாங்கள் தெளிவாகவுள்ளோம். இது பாரிய மனித உயிரிழப்பு தொடர்பானது என பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால் பிராந்திய ரீதியில் விளைவுகள் ஏற்படலாம் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் டேவிட்

(02ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு, புறநகர்ப் பகுதிகளில் சுற்றிவளைப்பு; 13 பேர் கைது!

கொழும்பு, மே 13

கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளில் நேற்று முன்தினமும் நேற்றும் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின் போது சந்தேகத்தின்பேரில் 13 பேர் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வெள்ளவத்தை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் நேற்று மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது சந்

(16ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேசம் ஒன்றிணைந்து போர் நிறுத்தம் கொண்டுவர வேண்டும்; அறிக்கை அழுத்தத்தினால் இனப்படுகொலையைத் தடுக்க முடியாது

### கூட்டமைப்பினர் அவசர கோரிக்கை

கொழும்பு, மே 13

"வன்னியில் இன்னும் ஒருசில நாள்களில் பாரிய இனப்படுகொலை அரங்கேறும். இதனைத் தடுத்து நிறுத்த சர்வதேச அறிக்கைகள் மூலம் அழுத்தங்களைப் பிரயோகித்தால் மட்டும் போதாது. இந்தியாவும் சர்வதேசமும் இணைந்து உடனடியாக யுத்த நிறுத்தத்தைக் கொண்டுவர வேண்டும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவசரகோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் வன்னி நிலைமை தொடர்பாக விளக்கமளித்தபோதே நாடாளுமன்றக் குழு உறுப்பினர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

செய்தியாளர் மாநாட்டில் இரா.சம்பந்தன் தலைமையில் சுரேஸ் பிரேமச்சந்திரன், சிறிகாந்தா ஆகியோர் விளக்கமளித்தனர்.

வன்னிப் பெருநிலப்பரப்பில் கடந்த மூன்று நாள்களில் மூவாயிரம்பேர் கொல்லப்பட்டும் 20 ஆயிரம் பேர் காயமடைந்

(16ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு கல்வியியற் கல்லூரிக்கு யாழ்.மாவட்டத்திலிருந்து தெரிவானோர்

யாழ்ப்பாணம், மே 13

மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரிக்கு 2009ஆம் கல்வியாண்டுக்கு யாழ். மாவட்டத்தில் இருந்து சமூக விஞ்ஞானம், சங்கீதம், நடனம், ஆகிய பாடநெறிகளுக்கு 15 பேர் தெரிவுசெய்யப் பட்டுள்ளனர். புதிய பயிற்சி நெறிகள் எதிர்வரும் 27 ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் ஆரம்பிக்கப் படவுள்ளதாகவும் இவர்களுக்கான கடிதம் அனுப் பிவைக்கப்படவுள்ளதாகவும் மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி அறிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரம் வருமாறு:-

**சமூகவிஞ்ஞானம்**

எ.சோபனா (சுன்னாகம்), எம்.அமர்தா (மானிப்பாய்), ரி.கோகுல்ராம் (கந்தர்மடம்), ரி.தாரணி (பருத்தித் துறை), ரி.கலைச்செல்வி (ஆனைக்கோட்டை), என்.விஜயரட்ணம்(பருத்தித்துறை)பி.கேமினி யாழ்ப்பாணம்.

**நடனம்**

பி.சுஜாதா (உரும்பிராய்), எஸ். றோமியா (கொக்குவில்), பி.யாழினி (மானிப்பாய்)

**சங்கீதம்**

ரி.ஜெமிலா (கொகுவில்), எஸ்.பிரமிலா (கோண்டாவில்), எஸ்.சர்மினி (தாவடி), எ.ஆரணி (இணுவில்), ஆர்.அனித்தா (சங்கானை). (1)

# இலங்கை விவகாரத்தைப்....



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மில்லிபாண்ட் செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

''பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் 8 உறுப்பு நாடுகள், ஐ. நா. அதிகாரிகள், மனிதாபிமான அமைப்புகள் கலந்துகொண்ட கூட்டத்திலிருந்து நாம் வந்துள்ளோம்.

இலங்கையின் பாதுகாப்பு வலயம் மற்றும் இடம்பெயர்ந்தவர்களுக்கான முகாம்களில் உள்ள நிலை குறித்து ஆராய்ந்தோம்.

இலங்கை நிலைவரத்தைக் கடந்த சில மாதங்களாக உன்னிப்பாக அவதானிக்கத் தவறியவர்களுக்கு, எமக்கு கிடைத்த தகவல்கள் அச்சமூட்டலாம்.

பாதுகாப்பு வலயம் எனத் தெரிவிக்கப்படும் பகுதியில் காணப்படும் மனிதாபிமானத் துயரம் மிகவும் கவலையளிப்பதாகும். இது சுமார் 50ஆயிரம் மக்கள் தொடர்பானது. சில குழுக்கள் ஒரு லட்சம் மக்கள் உள்ளனர் எனச் சொல்கின்றன.

பெருமளவில் பொதுமக்கள் உயிரிழப்பது குறித்து எவ்வித சந்தேகமுமில்லை. கடந்த வார இறுதியில் அதிகரித்த வன்முறைகள் நூற்றுக்கணக்கான மக்களைப் பலியெடுத்துள்ளன.

நம்பகத்தன்மைமிக்க தமது வார்த்தைகளை மிகவும் அவதானமாக வெளியிடும் அமைப்புகள், கடும் ஆட்டிலறித் தாக்குதல்கள் இடம்பெறுகின்றன எனவும் பாதுகாப்பு வலயத் திலுள்ள பொதுமக்களை இது பாதிப்பதாகவும் தெரிவிக்கின்றன.

**மோதல் பகுதிக்குச் செல்ல அனுமதி வேண்டும்**

ஐ.நா. அமைப்புகளுக்கும் ஏனைய மனிதாபிமான அமைப்புகளுக்கும் மோதல் இடம்பெறும் பகுதிக்குச் செல்வதற்குப் போதிய அனுமதி வழங்கப்படவில்லை. விசா மற்றும் அனுமதி மறுக்கப்படுவது குறித்தும் எமக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களைப் பாதிக்கும் நிலை குறித்து உரிய முறையில் அவதானிப்பதற்கு ஐ.நா. மற்றும் மனிதாபிமான அமைப்புகளுக்கு மாத்திரமல்லாமல் பத்திரிகையாளர்களுக்கும் அனுமதி வழங்கப்படவேண்டும்.

பாதுகாப்பு வலயத்திலிருந்து பொதுமக்கள் வெளியேறுவதற்கு விடுதலைப் புலிகள் அனுமதிக்கவில்லை. இது குறித்து எவரின் மனதிலும் சந்தேகமில்லை.

**பாதுகாப்புச் சபையில் ஆராயப்பட வேண்டும்**

"எனது சார்பாகவும் என்னுடைய மூன்று ஐரோப்பிய சகாக்களின் சார்பாகவும் தெரிவித்துக்கொள்ள விரும்புவது என்னவென்றால், இலங்கையின் மனிதாபிமான விவகாரம் பாதுகாப்புச் சபையில் ஆராயப்படவேண்டிய ஒன்றாகும் என்பதே.

நாங்கள் மூவரும் எங்களுக்காக மாத்திரம் பேசலாம். மற்றவர்களுக்காக எதனையும் தெரிவிக்க முடியாது.

இலங்கை விவகாரம் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் ஆராயப் படவேண்டிய ஒன்று என்பது குறித்து நாங்கள் தெளிவாகவுள்ளோம்.

இது பெருமளவு பொதுமக்கள் உயிரிழப்பு மற்றும் அழுத்தங்கள் தொடர்பானது. பிராந்தியத்தில் எதிர் விளைவுகளை ஏற்படுத்தக் கூடியது.

மேலும் இது பயங்கரவாத அமைப்பொன்றை நசுக்குவதற்காக ஐ.நாவின் உறுப்பு நாடு ஒன்று கனரக ஆயுதங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பது தொடர்பானது.

பாதுகாப்பு வலயத்தினுள் கனரக ஆயுதங்கள் பயன்படுத்தப்படுவதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் பற்றி உடனடியாகக் கொழும்புடன் ஆராய்வோம்.

இது எமக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு முரணானது. மேலும் சர்வதேச நாணய நிதியத்தின் கடனை பொறுப்புணர்வுடன் பயன்படுத்தத் தயார் என்பதை இலங்கை தெளிவுபடுத்த வேண்டும். எனினும், இது நடைபெறவில்லை'' - என்றார்.

**எல்லா உயிர்களும் அழியும் வரை காத்திருக்கப்போகிறோமா?**

பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் பேர்னாட் கௌச்னர் கருத்துத் தெரிவிக்கையில் குறிப்பிட்டவை வருமாறு:-

''டேவிட் மில்லிபாண்டுடன் நான் அங்கு சென்றேன். அங்கு நடப்பவற்றை ஆதரிக்க முடியாது.

நாங்கள் அனைவரும் குண்டு வீச்சு முடிவுக்கு வரும்வரை காத்திருக்கிறோமா? எல்லா உயிர்களும் அழியும்வரை காத்திருக்கிறோமா? ''- என்றார்.

இங்கு கருத்துத் தெரிவித்த ஒஸ்ரியாவின் சர்வதேச விவகார அமைச்சர் கூறுகையில்:-

''ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பின் கீழான கடப்பாடுகளின் படி இலங்கை அரசு தனது சொந்த மக்களைப் பாதுகாக்க வேண்டும்.

மேலும் முகாமில் உள்ள நிலைமைகள் குறித்து நாம் அறிந்தவைகள் அதிர்ச்சி அளிக்கின்றன.

இந்த முகாம்களில் என்ன நடைபெறுகின்றது என்பதை அறிவதற்காக சர்வதேசக் கண்காணிப்பாளர்களை இலங்கை அரசு அனுமதிக்கவேண்டும்.'' - என்றார்.

## தவறிவிட்டது

பழைய பொலிஸ் நிலைய வீதி, சுன்னாகம் தெற்கு, சுன்னாகம் என்னும் முகவரியுடைய சிமியோன் ஜனனன் என்பவரது தே.அ.அட்டை (903320931V) கடந்த சனிக்கிழமை 09/05/2009 அன்று கே.கே.எஸ் வீதியில் தெல்லிப்பளைக்கும் யாழ் நகரப் பகுதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியிலோ, அல்லது 0712827344 என்னும் தொலைபேசியினூடோ தொடர்பு கொண்டு தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.


# திருமண அழைப்பு

நிகழும் மங்களகரமான விரோதி வருடம் சித்திரை மாதம் 31 ஆம் திகதி (14.05.2009) வியாழக்கிழமை பூராட நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய காலை 8.30 மணி தொடக்கம் 10.00 மணி வரையுள்ள மிதுன இலக்கின சுபமுகூர்த்த வேளையில்-

செல்வராஜா திலகவதி
தம்பதியினரின் புதல்வன்
திருநிறைச் செல்வன்
**கருணாகரன்**



பராஜசிங்கம் கோமதி
தம்பதியினரின் புதல்வி
திருநிறைச் செல்வி
**நகுலா**

ஆகிய இருவருக்கும் திருநெல்வேலி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தில் மாங்கல்யதாரணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு இரு வீட்டாரும் அன்போடு அழைக்கின்றனர்.

தங்கள் நல்வரவை நாடும்

திரு.திருமதி.செல்வராஜா திலகவதி தம்பதியினர்
அர்மன் வீதி, திருநெல்வேலி.

திரு.திருமதி.பராஜசிங்கம் கோமதி தம்பதியினர்
அரசடி லேன், திருநெல்வேலி.


## கொடிகாமத்தில் ஐவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், மே 13

கொடிகாமம் பகுதியில் கசிப்பு மற்றும் அனுமதிப் பத்திரமின்றி சாராயம் வைத்திருந்த ஐந்து பேரை கொடிகாமம் பொலிஸார் மடக்கிப் பிடித்தனர்.

இந்த ஐந்து பேரையும் நேற்று சாவகச்சேரி நீதி மன்றில் ஆஜர் செய்தனர்.

வழக்குகளை விசாரித்த நீதிவான் ஐந்து பேரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# மரண அறிவித்தல்கள்

## அம்பலவாணர் இரத்தினசபாபதி

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் வேலணை கிழக்கு, மணியகாரன் வீட்டடியை வாழ்விடமாகவும் தற்போது கோண்டாவிலில் வசித்தவருமான அம்பலவாணர் இரத்தினசபாபதி நேற்றிரவு (12.05.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர்- பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும். நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் இரத்தினேஸ்வரி (கனடா), சிவதாஸ் (சாலினி நகையகம்), ஞானேஸ்வரி(கனடா), மகேஸ்வரி, விமலேஸ்வரி, காலஞ்சென்ற கிருபானந்தவதனி, மற்றும் ரஜனிதேவி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இரட்ணராஜா (கனடா), இந்திராணி (அதிபர், வேலணை சரஸ்வதி வித்தியாலயம்), பரராஜசிங்கம் (கனடா), சடாச்சரன் (ஜெகன்), கேதீஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.05.2009) புதன்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப. 2 மணிக்கு கோண்டாவில் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நெசவாளர் ஒழுங்கை,
இருபாலை வீதி, கோண்டாவில்.

தகவல்: இ.சிவதாஸ் (மகன்),
ச.சடாச்சரன் (மருமகன்).

## தங்கராசா றதீபன்



கேணியடி, கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தங்கராசா றதீபன் நேற்று முன்தினம் (11.05.2009) திங்கட்கிழமை அகால மரணமானார்.

அன்னார் தங்கராசா - சகுந்தலாதேவி தம்பதியினரின் அன்பு மகனும் பிரியாந்தினியின் அன்புக் கணவரும் சஞ்சயனின் பாசமிகு தந்தையும் கவிதா, றதீபா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் பாலசிங்கம் - தவமணிதேவி தம்பதியினரின் பெறாமகனும் பத்மநாதன் - பாலகௌரி தம்பதியினரின் அன்பு மருமகனும் மயூரனின் மைத்துனரும் சுப்பிரமணியம் - பரமேஸ்வரி தம்பதியினரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.05.2009) புதன்கிழமை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேணியடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி சந்திரசேகரம் யோகேஸ்வரி (குஞ்சு)

அரச வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, பம்பலப்பிட்டி 2/1A, அரச தொடர்மாடியை வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரசேகரம் யோகேஸ்வரி நேற்று (12.05.2009) செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும் இந்திரா (கனடா), அமரர் யோகநாதன் (J.T.O), அமரர் இராஜேஸ்வரி (மக்கள் வங்கி), பரமேஸ்வரி, Dr.சரவணபவன் (நியூசிலாந்து) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிதம்பரநாதன் (கனடா), தருமரத்தினம், ஜெயந்தி (நியூசிலாந்து) ஆகியோரின் மைத்துனியும் ரமேஸ் (கனடா), கணேஸ், சுரேஸ் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும் குமுதினி (கனடா), சிவானுஜா, சின்றில்லா, ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காயத்திரி, அர்ஜுன், கோபிகா, அபிராஜிதன், விதுப்பிரியா, காருண்யன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு நாளை (14.05.2009) வியாழக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு தகனக்கிரியைக்காக கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

83, அரச வீதி,
நல்லூர் வடக்கு.

தகவல்:
தருமரத்தினம் பரமேஸ்வரி(பபா).

## சிவசுப்பிரமணியம் கணேசலிங்கம்

(மாகாண சுகாதார அமைச்சு பணிமனை,வடமாகாணம், திருகோணமலை)



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வறுத்தலைவிளான், கட்டுவனை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் கணேசலிங்கம் நேற்று (12.05.2009) செவ்வாய்க்கிழமை திருகோணமலையில் அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம் - செந்தாமலர் தம்பதியினரின் மூத்தமகனும் காலஞ்சென்றவர்களான குலத்துங்கன்- நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும். சுந்திரநிதியின் (இந்தியா)அன்புக் கணவரும் இந்தியாவில் வசிக்கும் விவாகினி, சுபாகினி, ஜெகபிரதாபன் ஆகியோரின் அன்புத் தந்தையும். சொருபநிதி, தபோநிதி, ஹரிமுகன் (வருமான மேற்பார்வையாளர், பிரதேசசபை, மானிப்பாய்), சிறிகுமரன் (முன்னாள் சிமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை), துருபன் (நோர்வே), சயாநிதி ஆகியோரின் அன்புச் சகோதரனும். மன்மதராஜா(கணக்காளர், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், வடமாகாணம், திருகோணமலை), யோகேஸ்வரன் (அதிபர், துனைவி அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை), மாலினி, யசோதா(ஆசிரியை, சண்டிலிடிப்பாய் இந்துக்கல்லூரி), சுபாஜினி(நோர்வே), சுந்தரலிங்கம், கோபாலசிங்கம் (ஜேர்மனி), மகேஸ்வரி(பிரான்ஸ்), சந்திரகலா (ஜேர்மனி), வன்னியசிங்கம்(பிரான்ஸ்), சரஸ்வதி (பிரான்ஸ்), கதிரமலை (அப்பன் - கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் றாகுலா, மதுலா, கேசன், திவ்யா,ரம்யா, சரண்யா ஆகியோரின் அன்புப் பெரியமாமாவும். டினேஸ், டயான்,றஜிந்தன், கவிப்பிரியன், துளசிகா, ரூபகன், ரூபிசா, லக்ஷா ஆகியோரின் பெரியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் திருகோணமலையில் இன்று (13.05.2009) புதன்கிழமை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நிதி இல்லம், மானிப்பாய் மேற்கு,
மானிப்பாய். 021-222-7187

தகவல்:
சி.ஹரிமுகன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## சாட்சியமின்றி அரங்கேறும் யுத்தம்

வன்னியில் தமிழ் மக்கள் தினசரி பல நூற்றுக்கணக்கில் கொன்றொழிக்கப்படும் பேரவலம் தொடர்கையில் சர்வதேச சமூகம் அதைத் தடுத்து நிறுத்துவதற்குக் காத்திரமான பங்களிப்பு ஏதும் செய்யாமல் வெறும் கண்டனம், கவலை தெரிவிப்பு என்று அறிக்கைப் போர் நடத்திக்கொண்டிருக்கின்றது.

ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் எம்.பி.கூறுவதுபோல, கடந்த வாரத்தில் தென்னிலங்கை கௌதம புத்தரின் பெயரால் புனித வெசாக் பண்டிகையைக் கொண்டாடிய வேளையில் வடக்கில் பெரும் எணிக்கையான மக்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

கௌதம புத்தரின் காருண்ய சீலத்தைப் போதனையாகவும் வழிகாட்டலாகவும் கொண்டுள்ள ஒரு நாடு என-ஓர் அரசு என - தன்னைப் பிரகடனப்படுத்திக்கொண்டிருக்கும் ஒரு தரப்பால் இந்தப் பேரவலக் கொடூரம் அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருப்பதுதான் வேதனையிலும் வேதனை.

இவ்வளவு அட்டூழியங்களும் அங்கு நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கையில், அப்படி எதுவும் நடக்கவில்லை என்றும், படையினரின் நடவடிக்கைகளில் பொதுமக்களுக்கு எந்தவித பாதிப்புமே ஏற்படவில்லை என்றும் தாங்கள் கனரக ஆயுதங்கள், விமானக் குண்டு வீச்சுகள் போன்றவற்றைப் பயன்படுத்தவில்லை என்றும் கதை விட்டுக் கொண்டிருக்கின்றது அரசு.

இவ்வாறு சிறுபிள்ளைத்தனமாகக் கருத்து வெளியிடுவதை அரசு உடனடியாக நிறுத்தவேண்டும் என மனோ கணேசன் எம்.பி. சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

யுத்தப் பிரதேசத்தில் சிக்குண்டுள்ள மக்களுக்குரிய அவசர, அவசிய மருத்துவப் பொருள்கள், உணவுப் பொருள்கள் போன்ற இன்னோரன்னவற்றை எடுத்துச் செல்லவோ, மனிதாபிமானத் தேவைகளை வழங்கி நிறைவு செய்யவோ சர்வதேச தொண்டர் அமைப்புகளுக்கு அனுமதி வழங்க மறுக்கின்றது கொழும்பு. ஐ.நா. முகவர் அமைப்புகளைச் சேர்ந்தோர் உட்பட சர்வதேச தொண்டுப் பணியாளர்களோ, சுயாதீன ஊடகவியலாளர்களோ மோதல் பிரதேசத்துக்குச் செல்ல முடியாமல் தடையை எதிர்நோக்குகின்றார்கள். மோதல் பிரதேசத்தில் சிக்கிப் பேரவலப்பட்டு, அங்கிருந்து வெளியேறி, 'உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரின் மையங்கள்' என்ற பெயரில் முட்கம்பிகளுக்குப் பின்னால் அரசு ஏற்படுத்தியிருக்கும் தடுப்பு முகாம்களில் 'சிறை' வைக்கப்பட்டிருக்கும் சுமார் இரண்டு லட்சம் தமிழர்களைக் கூட ஊடகவியலாளர்கள், சர்வதேசப் பிரமுகர்கள், தொண்டர் அமைப்புப் பிரதிநிதிகள் சுயாதீனமாகச் சென்று, சுதந்திரமாகச் சந்தித்து, ஒளிவுமறைவின்றி வெளிப்படையாகப் பேசி, உண்மைகளைக் கண்டறிய அனுமதி இல்லை.

ஏன், இத்தகைய தடுப்பு முகாம்களில் சிறைவைக்கப்பட்டிருக்கும் மக்களை, அவர்கள் தமது வாக்குகள் மூலம் தேர்ந்தெடுத்த நாடாளுமன்றப் பிரதிநிதிகள் கூட நேரில் சென்று சந்தித்துப் பேச முடியாத அளவுக்குத் தடுப்பு விதிகள் மிக இறுக்கமாகவும் தீவிரமாகவும் உள்ளன.

இவ்வாறு 'சாட்சியம் ஏதும் இல்லாமல் ஒரு யுத்தம் முன்னெடுக்கப்படுவதை' தனது கெடுபிடிக் கட்டுப்பாடுகள் மூலம் உறுதிப்படுத்திக் கொண்டுதான் மக்கள் பேரழிவு பற்றிய ஐ.நா. அறிக்கைகளைக் கூட வெளிப்படையாக நிராகரித்துக் கண்டித்துப் புறந்தள்ளுகின்றது இந்த அரசு.

பாதுகாப்புத் தரப்பின் கெடுபிடிகளை மீறி சம்பவப் பிரதேசங்களுக்கு நேரில் சென்று உண்மைகளைக் கண்டறிந்து ஆதாரத்துடன் அம்பலப்படுத்த முயலும் ஊடகங்கள், ஊடகவியலாளர்கள் மீது அரசின் அதிகாரக் கரங்கள் பாய்வதும் இந்தப் பின்னணியில்தான். பிரிட்டிஷ் 'சனல் 4' ஊடகவியலாளர்கள் நாடு கடத்தப்பட்டதும் கூட இந்த வரிசையில் இடம்பெற்ற ஓர் அதிகாரக் கெடுபிடித் தனம்தான்.

இந்தக் கொடூர யுத்த விவகாரத்தில் அரசுத் தரப்புக்கு மறைக்கப்பட வேண்டிய விடயங்கள் ஏதும் இல்லை என்று கொழும்பு பீற்றிக்கொள்வது உண்மை என்றால், ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இலங்கை சம்பந்தமான பொது விவாதத்திற்கு அரசு ஏன் மறுக்க வேண்டும், அச்சம் கொள்ள வேண்டும் எனப் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. எழுப்பியிருக்கும் கேள்வியும் முற்றிலும் நியாயமானதே.

'மடியில் கனமில்லை என்றால் வழியில் பயம் இல்லை' - என்பார்கள். வன்னியில் தனது யுத்த நடவடிக்கைகளை சர்வதேச சட்ட விதிகளுக்கு அமைவாகவும், மக்களுக்குப் பாதிப்பில்லாமலும் தான் முன்னெடுப்பதாகக் கொழும்பு கூறுவது உண்மையென்றால், ஐ.நா.பாதுகாப்புச்சபையில் இவ்விடயம் குறித்து விவாதிக்க அஞ்சுவதேன்? அதற்கு முட்டுக்கட்டை போடுவது ஏன்?

வன்னியில் பொதுமக்களுக்கு - அப்பாவித் தமிழர்களுக்கு - நேர்ந்துள்ள கொடூரம் மிக மோசமானது. முழு உலகுக்கும் புரிந்த உண்மை அது.

இந்தத் தீவின் சிறுபான்மை இனத்தவரான தமிழர்கள் நீதி வேண்டி, நியாயம் கோரி, கௌரவமான - சமத்துவமான வாழ்வைத் தேடி நடத்தும் உரிமைப் போராட்டத்தை எப்படியும் நசுக்கி, அடியோடு ஒடுக்கி, அவர்கள் மீதான பேரினவாதத்தின் ஆக்கிரமிப்பையும், அடிமைப்படுத்தலையும் தொடர்ந்து நிலைநிறுத்தி உறுதிசெய்ய வேண்டும் என்ற மேலாண்மைத் திமிரில் சிங்களம் மிகவும் திடமாக இருக்கின்றது. உரிமை கோரும் தமிழர்களுக்கு உரிய பாடம் படிப்பித்து, அவர்களை நிரந்தரமாக அடக்கி வைத்திருப்பதை உறுதி செய்வதற்காக எத்தனை ஆயிரம் அப்பாவித் தமிழர்களைக் கொன்றாலும் தப்பில்லை என்ற ஆதிக்க எண்ணப் போக்கே தென்னிலங்கை மக்களைப் பற்றிப் பீடித்து நிற்கின்றது. அதனால்தான் இத்தகைய மனிதப் பேரவலக் கொடூரம் வன்னியில் அரங்கேறும் போது புத்தரின் பக்தர்கள் அதைப் பாராட்டி, வரவேற்றுப் பார்த்திருப்பது மட்டுமல்லாமல், அந்தப் பேரழிவுகளை புளகாங்கிதத்துடன் வரவேற்கவும் செய்கின்றார்கள்.

பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. கூட இந்த மனிதப் பேரவலக் கொடூரத்தைப் பட்டும் படாமலும் கண்டித்து வாளாவிருப்பதன் பின்னணியும் கூட இதுதான்.

# முள்ளிவாய்க்கால் பகுதியில் கடும் மோதல் காயமடைந்தோரை வெளியேற்றுவதில் சிரமம்

## நோயாளர்களைக் கப்பலில் ஏற்றப் புதிய இடத்தைத் தெரிவுசெய்ய முடிவு

கொழும்பு, மே13

முல்லைத்தீவு மாவட்டத்தின் வட கடலோரப் பிரதேசத்தில் இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே கடும் மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. இதனையடுத்து அந்தப் பகுதியில் பொது மக்களின் பாதுகாப்புக்காக அரசாங்கம் அண்மையில் புதிய பாதுகாப்பு வலயப் பகுதியை அறிவித்திருந்தது.

இந்நிலையில் முள்ளிவாய்க்கால் வைத்தியசாலையில் உள்ள நோயாளர்களைக் கப்பல் மூலம் திருகோணமலைக்கு அழைத்து வருவதற்காக நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

முள்ளிவாய்க்கால் கரையோரப் பகுதியில் இருந்து ஆழ் கடலில் நிறுத்தப்படும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலுக்கு நோயாளர்களை படகுகளில் ஏற்றிய இடத்தைச் சூழ்ந்த பகுதிகளில் கடும் மோதல்கள் இடம்பெற்று வருவதனால் நோயாளர்களை அங்கிருந்து வெளியேற்றும் முயற்சி பாதிக்கப்பட்டதாகவும் அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நோயாளர்களையும், காயமடைந்தவர்களையும் பாதுகாப்பாக படகுகளில் ஏற்றுவதற்குரிய புதிய இடத்தைத் தெரிவுசெய்வதில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பணியாளர்கள், வைத்திய அதி காரிகள் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கே.பார்த்திபன் ஆகியோர் நேற்று முன்தினம் ஈடுபட்டிருந்ததாகவும், இதனையடுத்து, நோயாளர்களும், காயமடைந்தவர்களும் திருகோணமலைக்கு கப்பல் மூலமாக அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தற்போது ஆயிரத்துக்கும் மேற்பட்ட காயமடைந்தவர்களும் நோயாளர்களும் முள்ளிவாய்க்கால் வைத்தியசாலையில் இருப்பதாகவும் அவர்களில் சுமார் 80 வீதமானவர்களை முன்னுரிமை அடிப்படையில் உடனடியாக திருகோணமலைக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டியிருப்பதாகவும் அங்குள்ள வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (50)

# வன்னியின் தற்போதைய பயங்கரமான நிலை தொடர்பாக ஐ.நா.பாதுகாப்புச் சபையில் விவாதிக்கப்பட வேண்டும்

## பிரிட்டன், பிரான்ஸ், ஒஸ்ரியா கூட்டாகக் கோரிக்கை

நியூயோர்க், மே 13

தொடரும் போர் காரணமாக வன்னிப் பகுதியில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டிருக்கும் நிலையில் அங்கு உருவாகியிருக்கும் பயங்கரமான நிலை தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையில் விவாதிக்கப்பட வேண்டும் என பிரான்ஸ், பிரித்தானியா மற்றும் ஒஸ்ரியா ஆகிய நாடுகள் வலியுறுத்தியிருக்கின்றன.

'அங்கு உருவாகியிருக்கும் மனிதாபிமானப் பிரச்சினையானது ஐ.நா. பாதுகாப்புச் சபையில் விவாதிக்கப்பட வேண்டிய ஒன்று' என நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு நியூயோர்க் ஐ.நா. சபையின் வளாகத்தில் ஊடக வியலாளர்களிடம் கருத்து வெளியிட்ட பிரித்தானிய வெளிவிவகாரச் செயலாளர் டேவிட் மில்லிபான்ட் தெரிவித்தார்.

வன்னி நிலைமைகள் தொடர்பாக பாதுகாப்புச் சபையில் அதிகாரபூர்வமற்ற முறையில் நேற்று முன்தினம் நடைபெற்ற விவாதத்தின் பின்னர் ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோதே டேவிட் மில்லிபான்ட் இந்தக் கருத்துக்களை முன்வைத்தார்.

பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் பேர்னாட் குச்னர், ஒஸ்ரியாவின் வெளிவிவகார அமைச்சர் மிக்கேல் ஸ்பண்டிலிகர் ஆகியோருடன் இணைந்து இந்த ஊடகவியலாளர் மாநாட்டை அவர் நடத்தினார்.

இலங்கையில் தற்போது நடைபெறும் நிகழ்வுகள் அனைத்துலகின் கவனத்தை தம்வசம் ஈர்க்கும் அருகதை உடையவை எனவும், அந்த விடயங்கள் தொடர்பாக ஐ.நா.வின் பாதுகாப்புச் சபையில் விவாதிக்கப்பட வேண்டியது அவசியம் எனவும் டேவிட் மில்லிபான்ட் இந்தச் சந்தர்ப்பத்தில் வலியுறுத்தினார்.

வடபகுதியில் இடம்பெறும் மக்கள் அவலங்களுக்கு அவையே சாட்சிகளாக உள்ளன. அத்துடன், இவை தொடர்பான அனைத்துலக மனிதாபிமானச் சட்டங்களில் கைச்சாத்திட்டிருக்கின்ற நாம் அனைவரும் அவற்றை உள்ளது உள்ளபடியும், ஆத்ம சுத்தியுடனும் நடைமுறைப்படுத்த முன்வர வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

'மக்களுடைய பாதுகாப்பு தொடர்பாக சிறிலங்கா அரசாங்கம் இன்னும் செய்ய வேண்டியது நிறைய இருக்கின்றது' என இங்கு கருத்து வெளியிட்ட ஒஸ்ரியாவின் வெளிவிவகார அமைச்சர் மிக்கேல் ஸ்பிண்டிலிகர், 'அரசாங்கம் அவர்களுடைய மக்களைக் காப்பாற்றியாக வேண்டும். அந்த மக்களை போர்ப் பகுதியில் இருந்து வெளியே கொண்டுவருவதற்கு அவர்கள் முயற்சிக்க வேண்டும்' எனவும் வலியுறுத்தினார்.

'இந்த நிலைமையில் அங்குள்ள முகாம்களின் நிலைமைகள் தொடர்பாக நாம் எமது கவனத்தைக் குவித்தாகவேண்டும். நாம் கேள்விப்பட்ட தகவல்களின்படி அங்குள்ள நிலைமைகள் மிகவும் அதிர்ச்சி தருவனவாக இருக்கின்றன. அத்துடன், அந்த முகாம்களுக்குள் என்ன நடைபெறுகின்றது என்பதைக் கண்காணிப்பதற்காக சுயாதீனக் கண்காணிப்பாளர்களை அனுமதிக்குமாறு நாம் சிறிலங்கா அரசாங்கத்தைக் கேட்க வேண்டும்' என்றும் ஒஸ்ரிய அமைச்சர் தெரிவித்தார்.

'இலங்கையில் நூற்றுக்கணக்கில் பொதுமக்கள் கொல்லப்படும் நிலையில் அந்நாட்டுக்கு இன்னமும் எவ்வாறு அனைத்துலக நாணய நிதியத்தின் (ஐ.எம்.எஃப்.) கடன்கள் கிடைக்கின்றன' எனக் கேள்வி எழுப்பினார் பிரான்சின் வெளிவிவகார அமைச்சர் பேர்னாட் குச்னர்.

'அங்கு என்ன நடக்கின்றது என்பது பற்றி விடுதலைப் புலிகளுடனான 25 வருடகாலப் போரில் அங்கு என்ன சோகங்கள் இடம்பெற்றன என எமக்கு முழுமையாகத் தெரியாது என யாரும் நம்பவேண்டாம். ஆனால் நாங்கள் அதிர்ச்சியடைந்து போயிருக்கின்றோம். இது அதிர்ச்சிக்கும் மேலான ஒரு நிலைமை. அந்தப் பகுதியில் மக்கள் துன்பப்பட்டுக்கொண்டிருக்கும் ஒரு நிலையை, மடிந்துகொண்டிருக்கும் ஒரு போக்கை எம்மால் ஆதரிக்க முடியாது' எனவும் பிரான்ஸின் வெளிவிவகார அமைச்சர் உறுதியாகத் தெரிவித்தார். (50)

## வன்னி மக்களுக்கு உதவி; வணிகர்கள் இன்று ஆராய்வர்

யாழ்ப்பாணம், மே 13

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வந்து நலன்புரிநிலையங்களில் தங்கியுள்ளவர்களின் அவசர அபிமானத் தேவைகளுக்கு உதவி வழங்குவது தொடர்பாக ஆராய்வதற்காக யாழ். வர்த்தகர்கள் இன்று கூடுகின்றனர்.

யாழ். வணிகர் கழக அலுவலகத்தில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு இது தொடர்பான கூட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது.

சகல வர்த்தகர்களையும் சமுகமளிக்குமாறு வணிகர் சங்கம் கேட்டுள்ளது. (1)

## திருமலை வில்லூன்றி முருகன் ஆலயத்தில் திருப்பணி வேலைகள்

யாழ்ப்பாணம், மே13

திருகோணமலை வில்லூன்றி கந்தசுவாமி ஆலயத்தின் இராஜகோபுரத் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாட்டில் இருந்து வருகை தந்துள்ள ஸ்தபதி கலாநிதி கணபதிப்பிள்ளையின் தலைமையில் இராஜகோபுர வேலைகள் நடைபெற்று வருவதாகவும் திருப்பணி வேலைகளுக்கு நிதி உதவியினை அன்பளிப்புச் செய்ய விரும்புவோர்கள் திருகோணமலை வில்லூன்றி கந்தசுவாமி ஆலய இராஜகோபுர திருப்பணிச் சபையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (9)

# இடம்பெயர்ந்து தனித் தனியாக முகாம்களில் தங்கியுள்ள குடும்ப உறுப்பினர்களை ஒன்றிணைக்க விரைவில் ஏற்பாடு

## மீள் குடியேற்ற அமைச்சர் தெரிவிப்பு

இடம்பெயர்ந்த மக்கள் வசிக்கும் முகாம்களில் தனித் தனியாக தங்கியுள்ள குடும்ப உறுப்பினர்களை ஒன்றிணைக்கும் நீடவடிக்கைகள் எதிர்வரும் இரண்டு வாரங்களில் நிறைவு செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. கடந்த நவம்பர் மாதம் முதல் பல கட்டங்களாக இடம்பெயர்ந்து சென்ற குடும்ப உறுப்பினர்கள் இவ்வாறு ஒன் றிணைக்கப்பட உள்ளனர்.

இதற்கான கணக்கெடுப்பொன்று அண்மையில் மேற்கொள்ளப்பட்டது. இவர்கள் தனித் தனிக் குடும்பங்களாக பிரிக்கப்பட்ட பின்னர், தனித் தனியாக சமைத்து சாப்பிடக் கூடிய வகையில் உணவுப் பொருள்கள் உள்ளிட்ட அத்தியாவசிய உபகரணங்கள் வழங்குவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அனர்த்த நிவாரணம் மற்றும் மீளக்குடியேற்ற அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

### நாளை

| | |
|---|---|
| சித்திரை 31 | 14.05.2009 வியாழக்கிழமை |
| திதி: | பஞ்சமி மாலை 5.43 வரை |
| நட்சத்திரம்: | பூராடம் மு.ப.11.25 வரை |
| சுபநேரம்: | 07.23 - 08.53 |
| இராகுகாலம்: | 01.23 - 02.53 |

## பல்கலைக்கழக பட்டதாரிகளுக்கு தொழில்துறை கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே13

யாழ். பல்கலைக் கழகத்தில் நாடகமும் அரங்கக்கலைகளும் கற்கை நெறியைக் கற்று இதுவரை காலம் வெளியேறிய பட்டதாரிகளுக்கு தொழில்துறை சார்ந்த கலந்துரையாடல் எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.பல்கலைக் கழக நாடக அரங்க விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அனைவரையும் சமுகமளிக்குமாறு மேற்படி பல்கலைக்கழக கலைப்பீட நுண்கலைத் துறை அறிவித்துள்ளது. (201)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முக்கிய கலந்துரையாடல்

2ஆம் கட்டத்தில் மீள பரிசீலனைக்கு அழைக்கப்பட்டு இதுவரை நியமனம் பெறாதோருக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் இடம்பெறவிருப்பதால் அனைவரையும் இன்று (13.05.2009) புதன்கிழமை யாழ். பெருமாள் கோயிலடியில் காலை 8 மணியளவில் ஒன்று கூடுமாறு பட்டதாரி செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

(85226) பட்டதாரி செயற்குழு.


# கனரக ஆயுத பாவனை குறித்த உறுதிமொழியை பின்பற்றுக!

## அரசை வலியுறுத்துகிறது அமெரிக்கா

கொழும்பு,மே 13

மோதல் நடவடிக்கைகள் முடிவுக்கு வந்துவிட்டன. கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தப் போவதில்லை என்று ஏப்ரல் 27ஆம் திகதி அளித்த உறுதிமொழியை பின்பற்றுமாறு இலங்கை அரசை அமெரிக்கா கேட்டுக் கொண்டுள்ளது.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் இயன் செலி இது தொடர்பாகத் தெரிவித்துள்ளவை வருமாறு:-

"அமெரிக்கா,பிரான்ஸ், பிட்டன் உட்பட சம்பந்தப்பட்ட நாடுகள் இலங்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையில் உத்தியோகப்பற்றற்ற விதத்தில் ஆராய்ந்தன.

"அமெரிக்கா சார்பில் ஐக்கிய நாடுகளுக்கான அதன் தூதுவர் சுசன் ரைஸ் கலந்து கொண்டார். அவர் இலங்கைநிலைவரம் குறித்துஅமெரிக்காவின் ஆழ்ந்தகவலையையும் வெளியிட்டார்.

"இலங்கையில் பொதுமக்களின் உயிரிழப்புகள் ஏற்றுக்கொள்ள முடியாதளவுக்கு அதிகரிப்பது குறித்து அமெரிக்கா ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது."

ஆயுதங்களைக் கீழே போடுமாறும், பாதுகாப்பு வலயத்தில் சிக்குண்டுள்ள மக்களை வெளியேற அனுமதிக்குமாறும் விடுதலைப் புலிகளை நாங்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம். "மோதல் நடவடிக்கைகளை முடிவுக்கு கொண்டு வருவது எனவும், பொதுமக்களுக்கு உயிரிழப்புகள் ஏற்படுத்தும் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தப் போவ தில்லை எனவும் இலங்கை அரசு ஏப்ரல் 27 ஆம் திகதி அளித்த உறுதி மொழி யைப் பின்பற்ற வேண்டும்.

"பொதுமக்களின் உயிர்களைப் பாதுகாக்க அதிகூடிய பொறுமையைக் கடைப்பிடிக்குமாறு இருதரப்புகளையும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறோம்." -என்று தெரிவிக்கப்பட்டது.


## National Child Protection Authority -Vacant

**1) Designation : Assistant Psycho Social District Coordinator- Jaffna**

***Qualification & Experience:***
A degree in Sociology/Psychology from a recognized University.
Diploma in Counseling from a recognized institution and previous experience in Psychosocial work will be an added advantage qualification.
Preference will be given to those proficient in all the three languages Sinhala, English and Tamil or any two languages thereof and those possessing computer literacy.

**Salary Scale** : Rs.126,600 - 6*1560 - 8*2220 - 5*3480 - 17,120 p.a
**Age** : Below 45 Years.

**2) Designation : Assistant District Coordinator- Jaffna**

***Qualification & Experience :***
A basic degree in Social Science/Psychology or Management of recognized University.
Computer literacy is an added advantage.
Good communication skill in English is prerequisite. Should be able to demonstrate strong managerial skills.

**Salary Scale** : Rs. 126,600- 6*1560 - 8*2220 - 5*3480 - 17,120 p.a :
**Age** : Below 45 Years.

Those who are eligible to apply for the' above posts are requested to prepare their own application and hand over to **Govt.Agent, District Child Development Committee, District Secretariat, Jaffna.** Before 16.05.2009 along with Copies of Educational certificate and Birth Certificate and other connected documents. Please note to include the contact telephone number in the application. Interview will be held on 18.05.2009 in this Secretariat to select the suitable candidates for the posts. The time of interview will be notified over the telephone.

**K.Ganesh**
***Govt. Agent., Jaffna District.***


## மென்பந்தாட்டம்

வடமராட்சி, மே 13

அல்வாய் மாலி சந்திமைக்கல் விளையாட்டுக்கழகத்தின் வருடாந்த மென்பந்துச் சுற்றுப்போட்டி எதிர்வரும் சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் காலை 7 மணிமுதல் மைக்கல் விளையாட்டுக்கழகமைதானத்தில் நடைபெறவுள்ளது.

6பேர், 5ஓவர் கொண்ட சுற்றுப் போட்டியில் நான்கு பிரிவாக பதிவு செய்யப்பட்ட 42 விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றுகின்றன. (1-236)

## விக்னா கல்வி நிறுவனத்தின் கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தின்
இந்து நாகரிக ஆசிரியர்
திரு.சி பத்மராசா
அவர்களின் பாசமிகு
தந்தையார்

### வேலுப்பிள்ளை சின்னத்தம்பி

அவர்களின் பிரிவால் துயருறும் ஆசிரியர், அவர்சார் ஏனைய குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்ம சாந்திக்காக வெள்ளைப் பிள்ளையாரை பிரார்த்திக்கிறோம்.

**அஞ்சலி செய்பவர்கள்:**
அதிபர், ஆசிரியர்கள்,
எழுது வினைஞர்,மாணவர்கள்

**விக்னா கல்வி நிறுவனம்,**
ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி



2003 A தாதிய பிரிவில் கல்வி பயின்று
தற்போது தாதிய உத்தியோகத்தராக
முல்லைத்தீவு மாவட்டத்தில் பணி புரிந்து
அகால மரணமடைந்த

செல்வன்
### ஆசீர்வாதம் கிறேஷியன் தர்மராசா

அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், போதனாசிரியர்,
2006A பிரிவு, 2006 II பிரிவு,
2007A பிரிவு, 2007B பிரிவு,
தாதிய மாணவர்கள், உத்தியோகத்தர்கள்,
துணை உத்தியோகத்தர்கள்,
தாதியக் கல்லூரி சமூகம்,
யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்



## திருமதி வள்ளியம்மை பேரம்பலம்

மண்கும்பான், 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வேலணை, 2 ஆம் வட்டாரத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி வள்ளிப்பிள்ளை பேரம்பலம் நேற்று (12.05.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - கனகத்தார் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பேரம்பலத்தின் அன்பு மனைவியும் பாலசிங்கம் (லண்டன்), கோபாலபிள்ளை (இந்தியா), திருச்செல்வம் (வவுனியா), கனகம்மா (மண்கும்பான்), சின்னத்தம்பி (குட்டி அண்ணா-பிரான்ஸ்) காலஞ்சென்ற அமரசிங்கம் மற்றும் புஸ்பவதி (பிரான்ஸ்), பாலசுந்தரம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் மனோன்மணி (லண்டன்), சிவபூரணம் (இந்தியா), அன்னலட்சுமி (வவுனியா), இராசரத்தினம் (மண்கும்பான்), காலஞ்சென்ற லீலாவதி (பிரான்ஸ்), ராணி (மண்கும்பான்), பாலசுப்பிரமணியம் (பிரான்ஸ்), மதிவதனி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான இராசமணி, பூரணம், தர்மலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, சுப்பிரமணியம் மற்றும் சிவஞானம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்ற இராசமணி மற்றும் குணநாயகம் ஆகியோரின் அன்புச் சிறியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.05.2009) புதன்கிழமை பி.ப.1 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சு.இராசரத்தினம்
(மருமகன்).

2 ஆம் வட்டாரம், வேலணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கே.ஸி.ஸி.ஸி வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ்

## ஆட்டநாயகனாகச் செல்ரன் தெரிவானார்

வலி.வடக்கு, மே 13

கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் யாழ்.மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே கே.ஸி.ஸி.ஸி. வெற்றிக்கிண்ணத்திற்காக நடத்திய கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் யாழ்ப்பாணம் சென்ரலைட்ஸ்விளையாட்டுக்கழகம்சம்பியனாகியது.


ஆட்டநாயகன் செல்ரன்


சிறந்த களத் தடுப்பாளர் றொகான்


சிறந்த பந்து வீச்சாளர் நாதன்


வெற்றிக் கிண்ணம் பெறும்போது

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகமும், யாழ்ப்பாணம் சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகம் முதலில் துடுப்பெடுத்தாடியது. 33.1 ஓவரில் அனைத்து விட்கெட்டுக்களையும் இழந்து 244 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. கே.செல்ரன் ஆறு பவுண்டறிகள் மூன்று சிக்சர்களுடன் 65 ஓட்டங்களையும் றொகான் 46 ஓட்டங்களையும் எம்.சுதர்சன் 40 ஓட்டங்களையும் ஆர் கோபிகன் 31 ஓட்டங்களையும் எஸ்.ஜேம்ஸ் ஜான்சன் 10 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டதுடன் உதிரிகளாக 33 ஓட்டங்களும் பெறப்பட்டன.

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் கே.நாதன் 07 ஓவர்கள் பந்து வீசி 28 ஓட்டங்களுக்கு 05 விக்கெட்டுக்களையும் ஏ.பார்த்தீபன் 08 ஓவர்கள் பந்துவீசி 60 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் எஸ்.நிரஞ்சனன், எஸ்.உமாதரன் முறையே 29, 32 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஜொலிஸ்ரார் ஆரம்பத்தில் விக்கெட்டுக்களை இழந்து தடுமாறிய போதிலும் அதனை சுதாகரித்து கொண்டு விளையாடியது.

எனினும் 36.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 211 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது. எ.ஜனார்த்தனன் 50 ஓட்டங்களையும் எம்.சுதாகரன் 29 ஓட்டங்களையும், எஸ்.உமாதரன் 35 ஓட்டங்களையும் எஸ்.நிரஞ்சனன் 19 ஓட்டங்களையும் கே. ராகாசித்தன் 15 ஓட்டங்களையும், ஏ.பார்த்தீபன் 14 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டதுடன் உதிரிகளாக 31 ஓட்டங்களும் பெறப்பட்டன.

சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தின் ஏ.சாள்ஸ் 06 ஓவர்கள் பந்துவீசி 21 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் ஆர்.மதுசன் 08 ஓவர்கள் பந்துவீசி 36 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும், கே.பிரகாஷ் 7.3 ஓவர்கள் பந்துவீசி 38 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும், ஆர்.சோபிகன், என்.நவநீதன், எ.நிசாந்தன் முறையே 19, 24, 40 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த கே.செல்ரன் சிறந்த துடுப்பாட்ட வீரனாகவும், ஆட்ட நாயகனாகவும் ஆட்ட தொடர் நாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டதுடன் சிறந்த களத்தடுப்பாளராக கே.றொசான் தெரிவுசெய்யப்பட்டார்.

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த கே.நாதன் சிறந்த பந்து வீச்சாளராகத் தெரிவானார்.

இந்தப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன் வெற்றியீட்டியோருக்கான வெற்றிக் கிண்ணங்களை வழங்கினார். (50-86)

## இன்றைய ஆட்டங்கள்

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் பாடசாலை அணிகளின் 17 வயதுப் பிரிவினருக்கு இடையே நடைபெற்றுவரும் லீக் முறையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரங்கள் வருமாறு:

**சென்.ஜோன்ஸ் மைதானத்தில்**

* யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி எதிர் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி.

**யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில்**

* பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி எதிர் யாழ்.இந்துக் கல்லூரி. (50-86)

# கல்வியியற் கல்லூரியில் உடற்கல்விப் பாடநெறிக்கு விண்ணப்பித்த மாணவர்கள் சிலருக்குப் பலத்த ஏமாற்றம்

## பாடத்தெரிவு சரியாக இல்லாமையே காரணமாம்

வலி வடக்கு, மே 13

இவ்வாண்டு கல்வியியற் கல்லூரியில் உடற்கல்விப் பாடநெறிக்கு விண்ணப்பித்த பல திறமையான மாணவர்கள் ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சையில் உடற்கல்விப் பாட நெறியில் சித்தியடையாமையால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கல்வியியற் கல்லூரியில் உடற்கல்விப் பாடநெறியைப் பயில்வதற்குப் பிரதேச , மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் இடம்பெற்ற விளையாட்டுப் போட்டிகளின் போது பெற்றுக்கொண்ட சான்றிதழ்கள் மிகவும் அவசியமானதாகக் கொள்ளப்பட்டு வந்தன. பாடநெறிக்கான மாணவர் தெரிவின்போது இச் சான்றிதழ்களுக்கு அதிக புள்ளிகள் வழங்கப்படுகின்றன.

இந்த ஆண்டும் பல மாணவர்கள் உடற்கல்விப் பாட நெறிக்கு விண்ணப்பித்துப் பிரதேச, மாவட்ட, மாகாண, தேசிய மட்ட விளையாட்டுச் சான்றிதழ்களுடன் நேர்முகப் பரீட்சைக்குச் சென்றனர்.

எனினும் அங்கு ஜி.சீ.ஈ சாதாரணதரத்தில் உடற்கல்வியும் சுகாதாரமும் என்னும் பாடத்தில் சித்தியடையவில்லை, தோற்றவில்லையெனக் கூறி அவர்கள் திருப்பி அனுப்பப்பட்டதாகக் கூறப்பட்டது.

இதனால் பல திறமையான விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் பலத்த ஏமாற்றத்துடன் திரும்பி வந்ததாகவும் அவர்கள் விளையாட்டிலும் விரக்தியுற்ற நிலையில் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்காலத்திலேனும் உரிய சுற்று நிருபங்களைக் கருத்தில்க் கொண்டு பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் விளையாட்டில் முன்னணியில் நிற்கும் மாணவர்களின் பாடத்தெரிவிலும் கவனம் செலுத்த வேண்டும் என பாதிக்கப்பட்ட மாணவர்கள் தெரிவிக்கின்றனர். (50-86)


யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற கூடைப்பந்தாட்டப் போட்டியில் சம்பியனாகிய யாழ்.மத்திய கல்லூரி வீரர்கள், அதிபர் பயிற்றுவிப்பாளருடன் காணப்படுவதையும், இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி வீரர்கள் பொறுப்பாசிரியருடன் காணப்படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள் : நேசன்)

# தற்காப்புக் கலைப் பயிற்சிகளை தற்காலிகமாக இடைநிறுத்தப் பணிப்பு

யாழ்ப்பாணம், மே 13

பாடசாலை மட்டங்களில் நடத்தப்பட்டு வரும் தற்காப்புக் கலைப் பயிற்சிகளை தற்காலிகமாக இடைநிறுத்தும்படி கல்வி அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் கொழும்பில் இரண்டு பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற தற்காப்புக் கலைப் போட்டியின் போது மாணவர் ஒருவர் மரணமடைந்ததன் எதிரொலியாகவே அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டில் தற்காப்பு கலையான கராத்தே, யூடோ, குத்துச்சண்டை, மல்யுத்தம் போன்ற தற்காப்பு கலைகள் தற்போது பயிற்றப்படாத போதிலும் தென்பகுதிப் பாடசாலைகளில் இப்போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

போட்டியொன்றில் இதேபோன்று ஏற்கனவே வேறு ஒரு மாணவனும் மரணமடைந்ததையும் கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக கல்வி அமைச்சினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் குறிப்பிட்ட தற்காப்புக் கலைகளில் நிபுணர்களுடன் தொடர்பு கொண்டு உரிய ஆலோசனைகள், அறிவுறுத்தல்கள் பெறப்பட்டதன்பின்னர் இப்போட்டிகளைப் பாடசாலை மட்டத்தில் நடத்துவது பற்றி தீர்மானிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (50-86)

# விளையாட்டு வீரர்கள் 6 பேருக்கு பெறுமதிமிக்க காலணிகள் அன்பளிப்பு

வலி.வடக்கு, மே 13

யாழ்.மாவட்டத்திலிருந்து கொழும்பில் நடைபெற்ற கிராமங்களுக்கு இடையேயான ஓட்டப் போட்டியில் கலந்துகொண்ட வீரர்கள், வீராங்கனைகள் ஆறு பேருக்கு வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் பெறுமதி மிக்க காலணிகள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தில் மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ் வீரர்களுக்கு இந்தக் காலணிகளை வழங்கினார்.

இந்த நிகழ்வில் வடமாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் எஸ்.அண்ணாத்துரை, யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஏ.எவ்.ஜே.ரூபசிங்கம் மற் றும் விளையாட்டு அலுவலர்கள் வீரர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

வடமாகாணப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றிபெற்றுப் பின்னர் தேசிய மட்டத்தில் நடைபெற்ற போட்டிகளில் கலந்து கொண்டவர்களுக்கே காலணிகள் வழங்கப்பட்டுள்ளன.

(50-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெசாக் தினத்தை முன்னிட்டு கரவெட்டி சிவில் பாதுகாப்பு பிரிவினரும் உடுப்பிட்டி பாதுகாப்புப் படையினரும் இணைந்து மக்களுக்கு அன்னதானம் வழங்கியபோது எடுக்கப்பட்ட படங்கள்.

உடுப்பிட்டி பாதுகாப்புப் படைமுகாமுக்கு முன்பாக உள்ள பிள்ளையார் ஆலயத்தில் படையினர் அர்ச்சனை செய்வதையும் பருத்தித்துறைப் பாதுகாப்புப் படைப் பிரிவின் பொறுப்பதிகாரி கேணல் ஜெயசூரிய தலைமையில் அன்னதானம் இடம்பெறுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: பாதுகாப்புப் பிரிவினர்)

# கலைஞர் விவரத்திரட்டு அடுத்தமாதம் வெளியீடு

கோப்பாய், மே 13

யாழ்.மாவட்ட கலாசாரப் பேரவையினால் யாழ்.மாவட்ட கலைஞர்களின் விவரம் திரட்டப்பட்டு வெளியிடப்படவுள்ளது.

அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வெளியீட்டு விழா அடுத்தமாதம் 21ஆம் திகதி நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(203-72)

# ௨010 பெப்ரவரி ௨௨இல் ஜனாதிபதித் தேர்தல்!

## எஸ்.பி. திஸாநாயக்க கூறுகிறார்

கொழும்பு, மே 13

2010ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலை நடத்த அரசு திட்டமிட்டுள்ளது என்று மத்திய மாகாண எதிர்க்கட்சித் தலைவர், எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டி ஜானகி ஹோட்டலில் நேற்று முன்தினம் இடம் பெற்ற தொழிலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

ஜனாதிபதித் தேர்தலின் பின்னரே பொதுத் தேர்தலும் நடைபெற இருக்கின்றது. எமது கட்சியைப் பொறுத்தமட்டில் எந்தச் சந்தர்ப்பத்திலும் நாம் இவற்றை எதிர்கொள்ளத் தயாராக இருக்கின்றோம்.

நாட்டின் தேர்தல் முறைகளில் பல சீர்திருத்தங்களை மேற்கொள்ளும் பொருட்டு தினேஷ் குணவர்தன தலைமையில் குழு ஒன்று நியமிக்கப்பட்டு அதன் ஊடாக புதிய நடைமுறைகளைத் தோற்றுவிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள இவ்வேளையில் அரசும் மாகாண சபைகள் உட்பட ஏனைய உள்ளூராட்சிச் சபைகளுக்குமான தேர்தல்களைப் பகுதி, பகுதியாக நடத்த அரசு எத்தனிப்பது சரியல்ல.

இப்போது தினேஷ் குணவர்தன தலைமையிலான குழு சிபார்சு செய்துள்ள தேர்தல் முறையை நாம் வரவேற்கிறோம். இந்த நாட்டில் சிறுபான்மையினர் காலாகாலமாக எம்மோடு சேர்ந்து வாழ்ந்து வருகிறார்கள். அவர்களின் பிரதிநிதித்துவம் அரசிலோ அல்லது உள்ளூராட்சி மன்றங்களிலோ இருந்தால் மாத்திரம் நாமும் பிரச்சினைகளின்றி இந்த நாட்டில் வாழ இயலும்.

இந்தியா, ஜேர்மனி போன்ற நாடுகளில் சிறுபான்மை மக்களுக்காக தேர்தல் முறையில் பல அணுகுமுறைகள் மேற்கொள்ளப்பட்டு அவை நடைமுறையில் இருந்து வருவதையும் நாம் நோக்கவேண்டும்.

நுவரெலியா மாவட்டத்தில் வாழும் சிங்கள, தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்துக்காக 10 தேர்தல் தொகுதிகளை அங்கு உருவாக்கினால் தலா ஐந்து பிரதிநிதிகளை இரு சமூகங்களில் இருந்தும் நாடாளுமன்றம் அனுப்பக்கூடிய வாய்ப்பு உருவாகும்.

தற்போது மாகாணசபைகளுக்கான தேர்தல்களைத் துண்டுதுண்டாக நடத்திவரும் அரசு 2010 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

இத் தேர்தலில் எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்கதான் வேட்பாளராகக் களமிறங்குவார் - என்றார்.

(சி)

# அகதிமுகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு அம்மைநோய் மற்றும் வயிற்றோட்டம்

## சுகாதார அமைச்சர் ஸ்ரீபால டி சில்வா தகவல்

கொழும்பு, மே 13

விடுவிக்கப்படாத பிரதேசங்களிலிருந்து அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பிரதேச அகதி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள அப்பாவிப் பொதுமக்கள் அம்மை மற்றும் வயிற்றோட்டம் ஆகிய நோய்களினால் பீடிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுமார் 8ஆயிரத்திற்கும் மேற்பட்ட அகதிகள் சின்னம்மை நோயினால் பீடிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

பெருந்தொகையான மக்கள் சிறுசிறு கூடாரங்களில் செறிந்து வாழ்வதனால் சின்னம்மை நோய் பரவக் கூடிய சாத்தியம் வெகுவாக உயர்வடைந்துள்ளதென அவர் தெரிவித்துள்ளார்.

அகதி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள பொதுமக்கள் வயிற்றோட்ட நோயினாலும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, அகதி முகாம்களில் உளரீதியாகப் பாதிப்புக்களை எதிர்நோக்கி வருவோருக்குச் சிகிச்சை அளிக்கும் நோக்கில் 50 வைத்தியர்கள் அகதி முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(50)


## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளில் 31.12.2007இற்கு முன்பு அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதிகளில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| தொடர் இல | கிளை | ஏலம் விடப்படும் திகதி | இடம் |
|---|---|---|---|
| 1 | யாழ்.ஸ்ரான்லி வீதி - 030 | | மக்கள் வங்கி, யாழ்.ஸ்ரான்லி வீதிக்கிளை - 030 |
| 2 | சேவை நிலையம், மானிப்பாய் - 837 | | |
| 3 | காங்கேசன்துறை - 031 | | |
| 4 | சேவை நிலையம், மல்லாகம் - 899 | | |
| 5 | யாழ்.பிரதான வீதி - 104 | 06.06.2009 | |
| 6 | சேவை நிலையம், உரும்பிராய் - 865 | 07.06.2009 | |
| 7 | ஊர்காவற்றுறை - 105 | | |
| 8 | நெல்லியடி - 106 | 08.06.2009 | |
| 9 | அச்சுவேலி - 107 | | |
| 10 | சங்கானை - 108 | 13.06.2009 | |
| 11 | சுன்னாகம் - 109 | | |
| 12 | சாவகச்சேரி - 110 | 14.06.2009 & | |
| 13 | சேவை நிலையம், கொடிகாமம் - 904 | | |
| 14 | வல்வெட்டித்துறை - 141 | 15.06.2009 | |
| 15 | யாழ்.பல்கலைக்கழகம் - 162 | | |
| 16 | சேவை நிலையம், திருநெல்வேலி - 855 | | |
| 17 | யாழ்.கன்னாதிட்டி - 284 | | |
| 18 | சேவை நிலையம், இணுவில் - 905 | | |
| 19 | பருத்தித்துறை - 285 | | |

அறிவித்தலின்றித் திகதியை ஒத்திப் போடும் உரிமை வங்கிக்கு உள்ளது.

உதவிப் பொதுமுகாமையாளர்,
வட்டலயம்.

மக்கள் வங்கி,
பிரதேச காரியாலயம்,
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/558526)

## இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர்.

(84946)

## தவறிவிட்டது

சோமர் வீதி, தாவடி தெற்கு, கொக்குவில் என்னும் முகவரியைச் சேர்ந்த சிவராசா விமல்காந் என்பவரது தேசிய அ.அட்டை (872374026V), விசேட அ.அட்டை(0906027407) என்பன 08.05.2009 அன்று பத்திரகாளி கோயிலுக்கு அருகில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

## தவறிவிட்டது

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் கடமைபுரியும் ம.ஞானசீலன் என்பவருக்குச் சொந்தமான மோட்டார் சைக்கிளின் NP MQ 2802 எனும் இலக்கத்தகடு ஒன்று (பின்புறம்) தெல்லிப்பழைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் கடந்த 09.05.2009 [illegible] ணம் வழங்கப்படும்.

தொடர்புக்கு:-தொ.பே: 0718562099



## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் பெரியான் நடேசன்
(முன்னாள் ஊழியர், காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை)

பிறப்பு
24*09*1935

இறப்பு
14*04*2009

பண்பின் பிறப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய்
குடும்பத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்த எங்கள் தெய்வமே!
எங்களை விட்டு விண்ணுலகு சென்றபொழுதும்
உங்கள் நினைவுகள் என்றும் எங்களை விட்டு நீங்காது.
உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:
முள்ளானை, இளவாலை.
க.துரைசிங்கம்
(மருமகன் - லங்கா சிமெந்து கூட்டுத்தாபனம்).
(85156)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
01 * 01 * 1929

மறைவு
24 * 04 * 2008

திருமதி இராசம்மா சங்கரப்பிள்ளை
(ஓய்வுபெற்ற ஆசிரியை, இணுவில் மத்திய கல்லூரி)

திதி: சித்திரை சங்கடஹர சதுர்த்தி

நெஞ்சினிலே நினைவு முகம்
நினைவில் தெரிவது உங்கள் ஆசைமுகம்
காலன் உங்கள் உயிரை எடுத்தாலும்
என்றும் உங்கள் நினைவுமுகம் எங்கள்
நெஞ்சில் இறுதிவரை நிலைத்திருக்கும்

இணுவில் தெற்கு.
பாலாவோடை, மானிப்பாய்.
உங்கள் நினைவுடன்:
மகன்மார், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பேரமக்கள்.
(85206)

## 14ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
29 * 03 * 1934

மறைவு
19 * 04 * 1995

அமரர் சின்னையா ஆறுமுகம்
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

திதி: சதுர்த்தி

பதினான்கு ஆண்டுகள்
பார்த்திருக்கப் போனதையா!
பாசத்தை வாரிக்கொடுத்து
பண்பாக வழி நடத்தினீர் - அந்த
நேச நினைவலைகள்
நெஞ்சை விட்டு நீங்கவில்லை ...

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
மனைவி, மகன்மார், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

வாகையடி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.
(83150)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச்சாலைக் காட்சிகள்



ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயத்தின் தரம் ஒன்றுக்கான கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றது.

இந்த விழாவில் தரம் ஒன்றுக்கான ஆசிரியை திருமதி ச.தர்மலிங்கம் மங்கள விளக்கேற்றுவதையும், அருகில் பாடசாலை அதிபர் மு.செல்வஸ்தான், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஓய்வுபெற்ற அதிபர் சி.சிவகுமாரன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.



யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையின் இந்த ஆண்டுக்கான மாணவ முதல்வர்களுடன் பாடசாலை அதிபர் வே.ஞானகாந்தன், உப அதிபர் எஸ்.தியாகலிங்கம் ஆகியோர் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம். (படம்:நந்தன்)




தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலயமட்ட கரப்பந்தாட்டப் போட்டிகளில் 15 வயதுப் பிரிவு பெண்கள் அணி, மட்டுவில் தெற்கு அ.மி.த.க. வித்தியாலயம் முதலிடத்தைப் பெற்றது.

இவ் அணி வீராங்கனைகளுடன் அதிபர் வே.சுந்தரலிங்கம், விளையாட்டுப் பொறுப்பாசிரியை திருமதி ஞா.குமாரசாமி உட்பட விளையாட்டுக் குழு உறுப்பினர்களும் காணப்படுகின்றனர். (207)



பன்னாலை சேர்.கனகசபை வித்தியாலயத்தின் 153 ஆவது ஆண்டு நிறைவும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் பாடசாலை அதிபர் சி.சிவநாதன் மற்றும் ஆசிரியர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம். (9)

# நீ அன்பைப் பற்றி பேசுபவனாக இருக்கலாம்; ஆனால் அது இதயத்தில் எழாவிடில் தடைபட்டுப் போகிறது!

## "நான்" என்னை எல்லோரிடத்திலும் காண்பதே வாழ்வின் சாரம்



உலகலாவிய ரீதியில் 186 நாடுகளில் மிகப் பெரிய அளவில் சமூக, கலாசார ஆன்மீகத் தொண்டுகளில் ஈடுபட்டுவரும் வாழும் கலை அமைப்பின் நிறுவுநர் ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜியின் 53 ஆவது பிறந்தநாள் இன்றாகும். 1956 ஆம் ஆண்டுமே மாதம் 13 ஆம் திகதி தமிழ்நாடு, பாபநாச சிவத்தில் உதித்த குருஜி ஆன்மீகத் துறையில் முற்றாக ஈடுபடுவதற்கு முன்னர் பௌதிகத்துறையில் உதவிப் பேராசிரியராகப் பணியாற்றியவர். அவரது 53 ஆவது பிறந்த நாளான இன்று அருளுரைகளின் பணிகளில் ஒன்றை இங்கு பிரசுரிக்கின்றோம்.

புத்தி, புத்தியைப் புரிந்து கொள்கிறது; இதயம், இதயத்தைப் புரிந்து கொள்கிறது. மூக்கினால் நுகர மட்டுமே இயலும்- காதுகளால் கேட்க மட்டுமே இயலும்-காதுகளால் பார்க்க இயலாது. ஆகவே இதயத்தால் உணர முடியும், இல்லையா?

நாம் தலையை (புத்தியை) இதயத்திலும் இதயத்தைத் தலையிலும் (புத்தியிலும்) வைக்க முயற்சி செய்கிறோம்; அது சாத்தியப்படுவதில்லை. உன் இதயம் ஏதோ ஒன்று அழகாக இருக்கிறதென்று உணர்கிறது-நாம் மனதில் அந்த வார்த்தையைப் பிடித்துக் கொள்கிறோம்; ஆனால், நாம் அதை உணர்வதில்லை. நாம் தலைக்குள் "அழகு" என்ற வார்த்தையைத் திரும்பவும் சொல்கிறோம்; ஆனால் அது அழகை உணர்வதில்லை.

அன்பிலும் கூட அப்படித்தான் நிகழ்கிறது. நீ அன்பைப் பற்றி அதிகம் பேசுகிறாய், உன் புத்தியில் அதனுடன் தடைப்பட்டுப் போகிறாய். ஆனால் இது இதயத்திற்குள் எழுவதில்லை.

மௌனத்தில் அன்பு வெளிப்படுகிறது, பிரகாசிக்கிறது. நாம் வெவ்வேறானவர் அல்லர்; நாம் அனைவரும் ஒருவரே. நான் உன்னை அறிவேன். நீ உனக்குள் ஆழ்ந்து செல்லும்போது நீயும் என்னை அறிவாய். நாம் அந்நியர்கள் அல்லர்.

நாம் அதிகமாக நேசிப்பவற்றில் நம்மையே நாம் காண்கின்றோம். நாம் நேசிப்பவற்றை நாம் இழந்தால், நாம் பாதிக்கப்படுவதும், துக்கப்படுவதும் இந்த உணர்வால் தான். நீ, உன் இசைக் கருவியை அதிகம் நேசித்தால் அது தவறுதலாகக் கீழே விழுந்து உடைவதைக் கேட்கும்போது உனக்குள் ஒரு பாதிப்பு எற்படுகின்றது இல்லையா? உனது வாகனத்திற்கோ, செல்லப் பிராணிக்கோ ஏதாவது நடந்தால், ஒரு இழப்பை உணர்கிறாய். நீ உன் உடலில் மட்டும் வாழவில்லை. நீ உன் "உணர்வு நிலையை" இந்தப் பிரபஞ்சம் முழுவதும் விரிவுபடுத்திக் கொண்டால் அங்கு இழப்பு ஏதும் இல்லை. நீ முழுமை அடைகிறாய்.

**நீ அளப்பரியவன்; அதனால் நீ ஒரு நீலமுத்து**

நீ ஒரு நீல முத்து. நீலமுத்து வேறு நீ வேறு அல்ல. நீல நிறம் அழகானது, பெரியது, பிரமாண்டமானது, எல்லையற்றது. இந்தப் படைப்பில் எல்லையற்றவை அனைத்தும் நீல நிறங்களில் தங்களை வெளிப்படுத்துகின்றன. நீ ஒரு நீல முத்து. ஏனெனில் உன்னை அளக்க முடியாது. நீ அளப்பரியவன்.

நீ உனக்குள் மிகவும் ஆழமானவன். நீ இந்த உடலில் இருந்தாலும் உன்னை (ஆன்மா) யாராலும் அளவிடமுடியாது. நீ எவ்வளவு ஆழமானவன். எவ்வளவு பழமையானவன் என்று யாராலும் அளவிட முடியாது. உனக்குள் இருக்கும் இந்த உள் உணர்வு நிலை வெறும் நீலமான ஆனந்தம் மட்டுமல்ல. அது ஒளிரும்-பிரகாசிக்கும்- ஆனந்தம். ஒரு நீலமுத்து என்றால் ஒரு வரையறுக்கப்பட்ட உருவத்திற்குள்ளிருப்பதுபோல் தோன்றினாலும், நீ எல்லையற்ற சுடர்விடும் ஒளியோடு கூடிய முத்து.

நாம், நம் இதயம் சொல்வதைத் கேட்க ஆரம்பித்தால் அப்போது நாம் எல்லோரும் ஒன்று என்பதை அறிவோம். நமது உடலில் எத்தனை, எத்தனையோ உயிர் அணுக்கள் இருக்கின்றன. அவை ஒவ்வொன்றுக்கும் உயிர் உண்டு. அனுதினமும் பல உயிர் அணுக்கள் பிறப்பதும், இறப்பதும் நடந்து கொண்டே இருக்கின்றது. ஆனாலும், ஓர் உயிர் அணுவில் ஏதாவது ஒரு பாதிப்பு ஏற்பட்டால், உன்னால் அதை அறிய முடிகிறது. அதுபோலவே, நம் எல்லோருக்கும் ஒரு வாழ்க்கை இருந்தாலும் நம் எல்லோருடைய வாழ்வையும் தனக்குள் அடக்கிக் கொண்டிருக்கும் "பரமாத்மா" (பரம்பொருள்) ஒன்றேயாகும்.

நாம் எல்லோரும் வாழ்க்கை எனும் சமுத்திரத்தில் மிதந்துகொண்டிருக்கின்றோம். பெருவாழ்வு-அது நம்மைச் சுற்றியுள்ள வெற்றிடம் மட்டுமல்ல-உயிரோட்டமுள்ள பெருவாழ்வு. இந்தப் பெருவாழ்வுக் கடலில் சிப்பிக் கூடுகள் நிறைய உள்ளன. ஒவ்வொரு கூட்டிலும் சிறிதளவு நீர் இருக்கிறது. இந்த நீர், கடலில் உள்ள நீரிலிருந்து வேறுபட்டதல்ல. ஆகவே, நாம் நம்முடைய கூட்டிலிருந்து வெளியே வந்து "நான்" இந்த உடலில் மட்டுமல்ல, "நான்" எங்கும் வியாபித்திருக்கிறேன். அங்கிருப்பதும் "நான்"-இங்கிருப்பதும் "நான்" என்று உணர்கிறோம். "நான்" என்னை எல்லோரிடத்திலும் காண்கிறேன். இதுதான் வாழ்வின் சாரம்.

# பாதுகாப்பு வலயத்தில் 100 க்கும் மேற்பட்ட குழந்தைகள் பலி!

## பெரும் இரத்தக்களரி என்கிறார் ஐ.நா.அதிகாரி கோர்டன்!!

கொழும்பு, மே 13

பாதுகாப்பு வலயத்தின் மீது கடந்த சனிக்கிழமை முதல் மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் கொல்லப்பட்ட பல நூற்றுக்கணக்கானவர்களில் 100 க்கும் மேற்பட்ட குழந்தைகளும் அடங்குவர் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

கடந்த சில மாதங்களாகப் பொதுமக்களின் உயிரிழப்புகள் அதிகரித்து வருவதை அவதானித்து வந்த ஐ.நா. பாரிய இரத்தக்களரி அபாயம் குறித்து தொடர்ச்சியாக எச்சரித்துவந்தது -என இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் அலுவலகப் பேச்சாளர் கோடன் வெய்ஸ் நேற்று முன்தினம் தெரிவித்திருந்தார்.

"வார இறுதியில் 100 க்கும் மேற்பட்ட குழந்தைகள் உட்பட மிகப்பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் கொல்லப்பட்டமையானது, நாம் எச்சரித்துவந்த இரத்தக்களரி யதார்த்தமாகியுள்ளதைப் புலப்படுத்தியுள்ளது" - எனவும் வெய்ஸ் தெரிவித்துள்ளார். (அ-சி)

# பண்டைய வைத்தியப் பாரம்பரியங்கள் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியம்

## மருத்துவக் கண்காட்சியில் அரச அதிபர்

நல்லூர், மே 13

எமது பண்டைய வைத்தியப் பாரம்பரியங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். இந்தக் கல்லூரியில் இருந்து பட்டம் பெற்று வெளியேறும் மாணவர்கள் இதனைத் தொடர்ந்து காப்பாற்ற வேண்டிய பொறுப்பை ஏற்க வேண்டும்.

இவ்வாறு யாழ்.அரசாங்க அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியின் யாழ்ப்பாண சுதேச மருத்துவ மாநாடும் கண்காட்சியும் நிகழ்வின் இறுதி நாள் இறுதி அமர்வு வைத்திய கலாநிதி பொன். இராமநாதன் தலைமையில் லங்கா ஆயுள் வேதக் கல்லூரியின் மண்டபத்தில் நடைபெற்றது.

அரச அதிபர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:-

சித்த ஆயுள்வேத அமைச்சர் யாழ்ப்பாணத்தில் சித்த ஆயுர்வேதத்துறையின் அபிவிருத்திக்கென முழுமையாக உதவத் தயாராக உள்ளார். எனவே இந்தத் துறையின் வைத்திக்கான திட்டங்களை நீங்கள் தயாரித்துச் சமர்ப்பிக்கவும். மூலிகைத் தோட்டம் மருந்து தயாரிக்கும் நிலையம் என்பன முக்கியம் என வலியுறுத்தப்பட்டது.

கிராம மட்டத்தில் இந்த மருத்துவத் துறை முக்கியமாதொன்றாக இருந்துள்ளது. இன்றும் கிராமிய மட்டத்தில் இதற்கான முக்கியத்துவம் உணரப்பட்டேயுள்ளது. சித்த மருத்துவத் துறையின் வளர்ச்சி இன்று அவசியமானதாகும்.

கடந்த 40 வருடங்களின் பின்னர் இன்று சித்தமருத்துவத்துறை சம்பந்தமான மாநாடும் கண்காட்சியும் இடம்பெறுகிறது.

நீண்ட காலத்தின் பின் நடைபெறும் இந்த நிகழ்வில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த பலதரப்பட்ட மூலிகைகள், மருத்துவப் பொருள்களைக் காணும்போது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது.

எமது முன்னோர்களின் பாரம்பரியம்மிக்க இந்த மருத்துவத்துறையின், பயன்கள் தொடர்ந்தும் எமது மக்களுக்குக் கிடைக்கக் கூடியதாக இந்தக் கல்லூரி வளர்ச்சிபெற வேண்டும்-என்றார்.

ஓய்வுபெற்ற நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவன், பாரம்பரிய வைத்தியர் ஜெ.ஜெயபாலன் உட்படப் பலர் இந்நிகழ்வில் உரையாற்றினர். (203-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் புதிய கட்டடம் அமைப்பு

யாழ்ப்பாணம்,மே 13

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நாளாந்தம் நோயாளர்களின் வரவு அதிகரித்துச் செல்கின்றது. இதனால் பெரும் இட நெருக் கடி ஏற்பட்டுள்ளது.

இதனை ஓரளவு நிவர்த்தி செய்யும் வகையில் சர்வதேச நிவாரணம் மற்றும் அபிவிருத்திக்குமான நிறுவனம் புதிய கட்டட மொன்றை சுமார் 35 லட்சம் ரூபாய் செலவில் நிர்மாணித்து வருகின்றது.

இக் கட்டடம் 100 அடி நீளமும் 20 அடி அகலமும் கொண்டதாக அமைக்கப்பட்டு வருகின்றது என இத்திட்டத்தின் முகாமையாளர் க. இராசேந்திரம் தெரிவித்தார். (131)


### விற்பனைக்கு
### முதலீட்டுக்கான அரிய ஒரு சந்தர்ப்பம்
யாழ்நகர், யாழ்ப்பாணம்

மதிப்பீட்டு இல. 55, 157 மானிப்பாய் வீதியில் தற்போதீ சமுர்த்தி வங்கி அமைந்துள்ள ஆதனம் (சிவன்கோயிலை அண்மித்துள்ளது)

காணியின் விஸ்தீரணம்: - 2 பரப்பு அண்ணளவாக
கட்டடவிபரம்- காட்சி அறை 1300 ச.அடி
இரண்டு மாடிக்கட்டடம்-2900 ச.அடி

மேலதிக விவரங்களுக்கு
INQUIRIES - CALL D.G. NEWTON
PHONE - 5444420 / 21-ETN 410
FAX - 5364295

(சி/558373)

### காணி விற்பனை

யாழ்நகர், இல. 11/1, மகாத்மா காந்தி வீதியில் (Clock Tower Road) அமைந்துள்ள காணித்துண்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு அண்மையில் (யாழ். கூட்டுறவுச்சங்க ஆதனத்தின் அருகில்) 6 ½ பரப்பு (44 பேர்ச்) (அண்ணளவாக) வங்கி, காட்சி அறை, கடைத் தொகுதிக்கு, தனியார் கிளினிக் என்பவற்றுக்கு உகந்தது.

மேலதிக விவரங்களுக்கு:

*INQUIRIES:* CALL - D.G.NEWTON
*PHONE:* 5444420/21-ETN 410
(C/558372) FAX: 5364295


## கூட்டங்கள்

சங்கானை, மே13

வலிமேற்கு கலாசாரப்பேரவையின் பொதுக்கூட்டம் எதிர்வரும் ஜூன் மாதம் முதல்வாரத்தில் நடைபெறவுள்ளது.

கலாசாரப் பேரவை உறுப்பினர் தமது அங்கத்துவத்தை, புதுப்பித்துக் கொள்வதுடன், புதிதாகச் சேரவிரும்புவோரும், பிரதேச செயலக கலாசாரப் பிரிவுடன் தொடர்பு கொண்டு இதற்கான விண்ணப்பப்படிவத்தைப் பெற்று எதிர்வரும் 22ஆம் திகதிக்கு முன்னர் தமது அங்கத்துவத்தை உறுதிப்படுத்துமாறும் வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (203-29)

* * *

இணுவில், மே13

வலி.தெற்குப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாச விசேட கூட்டம் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்குக் சுன்னாகம் கந்த ரோடை வீதியில் அமைந்துள்ள மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் இடம்பெறவுள்ளது. (203)

## தெஞ்சை விட்டகலாத
## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்





| திருமதி சண்முகலிங்கம் பரமேஸ்வரி | அமரர் முருகேசு சண்முகலிங்கம் (பிரபல வர்த்தகர் SMS) | அமரர் சண்முகலிங்கம் காந்தருபன் (இயக்குநர் SMS தொலைத்தொடர்பகம்) |
|---|---|---|
| மண்ணில்: 11.04.1951 | மண்ணில்: 28.03.1941 | மண்ணில்: 11.02.1983 |
| விண்ணில்: 13.05.2006 | விண்ணில்: 13.05.2006 | விண்ணில்: 13.05.2006 |

மாதமோ முப்பத்தாறு... மறைந்து மூவருடமாகிப்...
போனதோ அம்மையப்பா...? புயமெனும் தம்பியோடு...
கூடவோ மூவராய் நீர்... எம் குரலதும் கேளாத் தூரம்...
ஏனது சென்றீர்ரோ நீர்...? எம்துயர் களைய இங்கு.....
யாருளர் என்று கண்டீர்....? யமனவன் சுற்றத்தோடு......
வாவென அழைத்துச் செல்ல... வகையெதும் தெரியாப் பாவப்....
பேளையாய் நின்றோம் ஐயா... பேதையர் என்செய்வோமோ....

நோயது கண்டு நொந்தால் ... நோகவே வேண்டாமென்று...
மார்பொடு மடியில் சாய்த்து... மக்கள் நாம் அண்ணர் அக்கா....
கூடவே உள்ளோம் என்று... குளறி நாம் காப்போமையா.....
ஆசையால் அன்பால் உங்கள்... அடங்கிடாப் பாசத்தால் நாம்....
ஆன நற் கடமைசெய்து ... அமர்ந்திடக் கூடுமையா.....

ஒன்றெனில் கத்தலாமோ....? இரண்டெனிலீ கதறலாமோ...?
மூன்றுமே ஒன்றாய்ப் போக... முற்றமே வெறித்துப் போக....
ஏங்கியே மாண்டு நாமும்... ஏகிடல் அன்றி இங்கு....
நீண்டநாள் கழிக்கவென்ன...? நீங்களே இல்லா வாழ்வு....
வேண்டிட என்னவுண்டு...? வேகிறோம் அன்பால் நாமும்...

காண்டிட வழியுமுண்டோ...? எம் கண்களே கனவாய்த் தானும்...
தீண்டிட வாரீரோ நீர்...? திசைமறந் தலறுகின்றோம்...
வேண்டிடாத் தெய்வமில்லை... விலையிலீா அமைதி கொள்வீர்...
ஓம் சாந்தி!சாந்தி!! சாந்தி!!!

புளியங்கூடல், ஊர்காவற்றுறை. குடும்பத்தினர்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் : 01.02.1941
மறைவு: 24.04.2008

### அமரர் மகாலிங்கம் சின்னராசா

திதி: சதுர்த்தி (13.05.2009)



ஆண்டொன்று சென்றுவிட்டாலும்
உங்கள் அன்பு முகம் மறந்திடாது
காலன் அவன் உங்களை களவெடுத்தாலும்
உங்கள் அன்பு வார்த்தைகள்
என்றும் மறக்கமுடியவில்லை

24.04.2008 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் ஓராண்டு நினைவு ஆத்ம சாந்திப் பிரார்த்தனை எமது இல்லத்தில் இன்று (13.05.2009) புதன்கிழமை நடைபெறும்.
அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

V.M.வீதி, சின்னப்பிள்ளையார் கோயிலடி,
பருத்தித்துறை.
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூவாசம் வீசுமா?

## தகவல் பெட்டகம்

நமது சுற்றுப்புறச் சூழல் மாசடைந்து வருவதால், இயற்கைச் சுற்று வட்டத்திற்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டு வருகின்றதென்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

வாகனங்கள் நாளாந்தம் வெளியிடும் பெருமளவு புகையினால் பூக்களின் வாசம் கெட்டு அதன் விளைவாக தேநிக்களை அவை கவரத் தவறி பூச்செடிகளின் பரவலாக்க விருத்தி குறையும் ஆபத்து உருவாகியுள்ளது என சமீபத்திய ஆய்வு ஒன்று குறிப்பிடுகிறது.

மலர்களினால் உற்பத்தி செய்யப்படும் நறுமண மூலக்கூறுகள், மாசற்ற சூழலில் சுமார் 1000-1200 மீற்றர் பயணிப்பது சாத்தியம். இருப்பினும் தற்போது அவை 200-300 மீற்றர் தூரமே பயணம் செய்வதாக ஆராய்ச்சிகளில் கண்டறியப்பட்டுள்ளது. 'இதன் பயனாகத் தேநிக்களால் மலர்களின் இருப்பிடத்தை அறிவதில் சிக்கல் ஏற்படுகிறது' என்வேர்ஜினியா பல்கலைக்கழகப் பேராசிரியர் 'ஜோசே பண்டஸ்' கூறுகிறார். இவ்வாறு இரசாயன மாற்றத்திற்கு உட்பட்ட நறுமண மூலக்கூறுகளால் பூக்கள் வாசம் இழந்து விடுகின்றன. அங்கு நச்சுச் சுற்றுவட்டம் ஏற்பட்டு பூச்சியினம் மலர்களில் தேன் உணவு எடுப்பது சிக்கலடைகிறது. அதனால் பூச்சி வர்க்கத்தின் ஆயுட்காலம் குறைவடைய நேர்கிறது.

எனவே பூச்சி இனங்களின் வாழ்க்கையை சூழல் மாசுகள் பாதிப்படையச் செய்கின்றன. அவற்றின் உணவு விநியோகம் தடை செய்யப்பட்டு, அதன் விளைவாக அவற்றுக்கு எதிரிகளை எதிர்க்கும் ஆற்றல் குறைகிறது. ஆண் வர்க்கத்தைக் கவரும் ஆற்றல் அருகிப்போகிறது. மேலும் அவற்றின் வாழ்க்கைச் சுற்றுவட்டம் பெரும் பாதிப்படைந்து அவ்வினம் புவியிலிருந்து முற்றாக அழிந்துபோகும் சாத்தியம் உருவாகும்.

தொகுப்பு: எஸ்.பேராசிரியன்

# மனமே சாய்ந்துவிடாதே!



மனச்சோர்வு போன்ற மிதமான உளநோய்கள், உணர்ச்சிக் கோளாறுகளைக் கண்டு பயப்படத் தேவையில்லை. இந்த உள சமூகப் பிரச்சினைகள் வாழ்வில் ஏற்படும் இழப்பு அல்லது மோசமான சூழ்நிலை போன்ற காரணங்களால் ஒருவரில் ஏற்படும் துக்கம். காலப்போக்கில் மெல்லமெல்ல அகன்று விடக்கூடியதுதான். ஆனாலும் சிலரில் இந்தத் துக்கம் அதிக காலத்திற்குத் தீவிரமாக நீடித்து நிலைத்து நின்றால் அதனையே மனச்சோர்வு என்கிறார்கள்.

நிர்வாக மாற்றம் ஏற்படும்போது பதவியிறக்கம், வேலையை இழத்தல் போன்ற பல மாற்றங்கள் ஏற்படுகின்றன. அவற்றைச் சமாளிக்க முடியாமல் திணறும்போது மனச்சோர்வு ஏற்படுகின்றது.

உடல்நிலை மாற்றங்கள் - நோய்கள் போன்ற பாதிப்பும் உளப்பாதிப்பாக மாறுவதுமுண்டு. இவற்றைச் சிலர் எதிர்கொண்டு போராடிச் சமாளித்து விடுகிறார்கள். சமாளிக்க முடியாதவர்கள் கஷ்டத்தில் மாட்டிக்கொள்கிறார்கள். நம்மில் யாவருமே ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் மனச்சோர்வுக்கு உள்ளாகித் துன்பப்பட்டிருக்க வேண்டிவந்திருக்கும்.

நமது துன்பம் பற்றி நெருங்கிய நண்பரோடு பகிர்ந்துகொண்டு உரையாடலாம். என்றாலும் நட்பும் பகையாய் மாறும்போது அவர் நாம் சொன்ன இரகசியங்களையே எமக்கெதிரான ஆயுதங்களாக எடுத்துக்கொள்வார். இந்த அனுபவம் உங்களில் பலருக்கு ஏற்பட்டிருக்கலாம். எனவே இரகசியம் காப்போம் எனச் சத்தியப் பிரமாணம் செய்துகொண்ட தகுந்த உளவளத் துணையாளரை நாடலாம். முக்கியமாக அன்புக்குரியவரின் இழப்பால் ஏற்படும் இழவிரக்கம் (GRIEF) உண்டாக்கும் மனச்சோர்வு சிலரில் நீண்டகாலம் இருக்கக்கூடியது; சிலவேளை வருடக்கணக்கிலும் நீடிக்கும். எனவே இதற்கு உரிய கவனம் செலுத்தி ஆரம்பத்திலேயே உதவியளித்தல் வேண்டும். உளவளத்துணையாளர், இழப்பைப் பற்றியும், மனச்சோர்விற்கான மற்றைய உளசமூகக் காரணங்கள் பற்றியும் உதவிகோரி வந்தவர் சொல்லும் கதைகளை மிகுந்த கவனத்தோடு கேட்பார். கோபப்பட்டாலும் அழுதாலும் உங்கள் உணர்வுகளை வெளிப்படுத்த இடம் தருவார். இறந்தவரைப் பற்றி நீங்கள் என்னவெல்லாம் சொல்கிறீர்களோ அவற்றைக்கேட்டு இழப்பை ஏற்றுக்கொள்ள உதவுவார். தன்னம்பிக்கை, சுயமரியாதை வாழ்க்கையை எதிர்கொள்ளும் சக்தி போன்றவற்றைக் கட்டி எழுப்பி இயல்பு நிலைக்கு வர உதவுவார். அவரைத் தொடர்ந்து சந்திக்க வேண்டியிருக்கும். ஓர் அன்புக்குரியவரின் இறப்பை உரிய கிரியைகள் செய்து முறையாக நடத்திய பின்னர் முப்பத்தியொருநாள் அவருக்குரிய காரியங்களையே செய்து அவரின் பெருமைகளையே பேசி அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியம் செய்து உறவினர், நண்பர்களை அழைத்து மதியபோசனம் கொடுத்துத் தமது துன்பத்தைப் பகிர்ந்துகொள்கிறார்கள். ''அவர் பிள்ளைகளைப் படிப்பித்தவர். எனக்கொரு குறையும் வைக்கேல்ல'' என்று அவரின் மனைவி சொல்லி ஆறுதலடைவார். எல்லாரும் வந்து கூடுவதால் சமூக ஆதரவு கிடைக்கிறது.

உணர்ச்சிகளை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் கிடைக்கிறது. அவர் பெயரில் நினைவுமலர் வெளியிட்டுத் தங்கள் பாசத்தை, இழப்பை உருக்கமாக வெளிப்படுத்துவார்கள்; இழவிரக்கத்திலிருந்து வெளிவந்து இயல்பான நிலைக்கு வருகின்றனர். தமது தொழில்களைச் செய்து மற்றவர்களோடு இணைந்து கொள்கின்றனர். ''எம்மாலியன்ற கடைசிக் கடமைகளைச் செய்துவிட்டோம்'' என்று மனத்திருப்தி அடைகின்றனர்.

குடும்பத்தினர் இறந்தவரை முற்றாக மறந்துவிடுவதில்லை. மாதாமாதம் மாசியம், மாளைய பட்சத்தில் மாளையம், பின் ஆண்டுத்திவசம் போன்ற பிதிர்க்கடன்களைச் செய்கின்றனர். இது நிலைத்து நிற்கும் துன்பத்தைக் குறைக்க உதவுவதாக அமையும். எனது நண்பர் ஒருவர் அமெரிக்காவில் இரசாயன எஞ்சினியராக இருந்தார். சில ஆண்டுகளின் முன்னர் அவரின் தந்தையார் யாழ்ப்பாணத்தில் இறந்துபோனார். அவரின் தம்பியார் அமெரிக்காவிலிருந்த அவரோடு தொடர்புகொண்டபோது, உடன் வரமுடியவில்லை என்றும் நீயே கிரி஍்யகளைச் செய்துவிடு என்றும் அவர் அறிவித்தார். இது நடந்து ஆறு மாதத்தின் பின்னர் தமையனார் யாழ்ப்பாணத்திற்கு வந்தார். அவர் முதலில் செய்த காரியம், ஒரு சிவன்கோயிலுக்குச் சென்று தனது தகப்பன் பேரில் ஒரு மோட்ச விளக்கு வைத்து அர்ச்சனை செய்வித்ததுதான். அவர் என்னிடம் ''இப்போதுதான் எனக்கு மன ஆறுதலாக இருக்கிறது'' என்று சொன்னார். காணாமற்போனவர்கள் சம்பந்தமான மனக்கஷ்டமான விஷயம், அவர்களில் யாராவது இறந்துவிட்டார் என்று செய்தி கிடைத்தால் அவரின் குடும்பத்தினர் உரிய கிரியைகளைச் செய்ய முடியாமல் போவதாகும். இது அக்குடும்பத்தவர் மத்தியில் நிலைத்து நிற்கும் துன்பமாகிவிடும். இப்படியான குடும்பத்தினருக்கு ஊரில் உள்ள மக்களினது சமூக ஆதரவு தேவையாகும்.

இர.சந்திரசேகர சர்மா (M.A.)




உள்ளத்துள் தூங்கியிருக்கும்
உயிருள்ள ஜடமொன்றின்
உணர்வுகளைத் தட்டியெழுப்பி
உடலினை உறைய வைத்து
உள்ளத்தை ஊனமாக்கி
உண்மையை மறைத்து வைத்து
பெண்மையைத் தாய்மையாக்கும்
ஆண்மையின் சங்கமம்

மகேந்திரன் - மேனன்
கொற்றாவத்தை



# நுரையீரல் நோயால் மனச்சோர்வு அதிகரிக்கும்

கலையமசன்

நுரையீரல் பாதிப்பு உடைய நோயாளிகளுக்கு மனக்கவலை ஏற்படும் வாய்ப்புகள் அதிகம் என்று தெரியவந்துள்ளது. Chronic Obstructive Pulmonary Disease (COPD) எனப்படும் நுரையீரல் தொடர்பான நோய் உடையவர்களுக்கு ஆரோக்கியமான உடல்நலம் அல்லது சர்க்கரை நோய் உள்ளவர்களைக் காட்டிலும் மனக்கவலை - மனச்சோர்வு ஏற்படும் வாய்ப்புகள் அதிகம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நுரையீரல் தொடர்பான நோய் ஏற்படுபவர்களுக்கு மூச்சுத் திணறல் ஏற்படக்கூடும். அதிக சளியுடன் கூடிய இருமல், தும்மல், மூச்சுவிடுவதில் சிரமம், நெஞ்சுப் பகுதியில் இறுக்கம் உள்ளிட்ட அறிகுறிகள் ஏற்படலாம். நுரையீரல் நோய்களுக்கு முக்கிய காரணமாக அமைவது புகைப்பிடித்தல் ஆகும்.

நெதர்லாந்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், நுரையீரல் நோய் உடைய 999 பேரிடமும், சர்க்கரை நோயுடன் வாழும் 978 பேரிடமும், ஆரோக்கியமான உடல்நிலை கொண்ட 2494 பேரிடமும் நடத்திய ஆய்வில் நுரையீரல் பாதிப்புடையவர்களுக்கே மனச்சோர்வு வாய்ப்புகள் அதிகம் இருப்பது கண்டறியப்பட்டது.

சக்கரை நோய் உள்ளவர்களுக்கும் ஆரோக்கியமாக உள்ளவர்களுக்கும் மனச்சோர்வு ஏற்படுவதற்கான அறிகுறிகள் குறைவாகவே இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொண்டவர்களின் வயது, சமூகப் பொருளாதார நிலை, அவருக்கு உள்ள இதர நோய், ஆணா அல்லது பெண்ணா? என்பன போன்றவை குறித்தும் ஆய்வு நடத்தப்பட்டு தகவல்கள் திரட்டப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலாபூஷணம் விருதுக்கு விண்ணப்பம் கோரல்

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் இந்த ஆண்டுக்குரிய கலாபூஷணம் விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சிற்பம், ஓவியம், வாய்ப்பாட்டு, தவில், நாதஸ்வரம், நடனம், நாடகம், நாட்டுக்கூத்து, நாட்டுப்புறவியல், இலக்கியம், சினிமா, ஊடகத்துறை போன்ற பல்வேறு துறைகளிலும் சேவையாற்றிவரும் 60 வயதுக்கு மேற்பட்ட கலைஞர்கள் விண்ணப்பிக்க முடியும்.

வலி. மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மேற்படி தகைமையுள்ள கலைஞர்கள் பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் விண்ணப்பங்களைப் பெற்றுப் பூரணப்படுத்தி உரிய ஆவணங்களை இணைத்து எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்பதாக மேற்படி பிரதேச செயலகத்தில் சமர்ப்பிக்குமாறு வலி மேற்கு, சங்கானை பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (201-29)

## கேள்வி அறிவித்தல்- இல 07

### கட்டடங்கள் திணைக்களம் வடக்கு மாகாணம், யாழ்ப்பாணம்

01. உதவிப் பணிப்பாளர், கால் நடை உற்பத்திச் சுகாதார சேவைகள் திணைக்களம், யாழ்ப்பாணம் சார்பாக தலைவர், பிராந்திய கேள்விச்சபை/ பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம் (வடக்கு மாகாணம்) யாழ்ப்பாணம் அவர்களால் தகுதிவாய்ந்த சகல கேள்விதாரர்களிடமிருந்தும் கீழ்வரும் வேலைகளுக்கான மூடிய கேள்விகள் 27.05.2009 பிற்பகல் 3 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

| தொ. இல. | ஒப்பந்த குறியீட்டு இல. | ஒப்பந்த வேலை விவரம் | இக்ராட் தரம் | வேலைக்கான ஆகு செலவு ரூபா | கேள்விப் பிணை | மீளளிக்கப்படாத கட்டணம் |
|---|---|---|---|---|---|---|
| 01. | JF/BD/CE/VSO/01/2009 | கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகம் நிர்மாணித்தல் உடுவில் கட்டம்-III | M8/C9 | 1.01 Mn | 10,100.00 | 500.00 |
| 02. | JF/BD/CE/VSO/02/2009 | கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகம் நிர்மாணித்தல் உடுவில் கட்டம்-IV | M9/C10 | 0.96 Mn | 9,700.00 | 500.00 |

02. கேள்வி அறிவித்தல் தொடர்பில் பின்வரும் தகைமைகளை சகல கேள்விதாரர்களும் கொண்டிருக்க வேண்டும்
    I. மேற்கூறிய அட்டவணையின் பிரகாரம் குறிப்பிடப்பட்ட ICTAD தரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
    II. ICTADஅறிவுறுத்தலுக்கமைய மேற்படி வேலை தொடர்பில் போதிய கேள்வி தகவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
    III. முன்னைய வேலைகளில் மோசமான, நேர்மையற்ற வெளிப்படுத்தல்களைக் கொண்டிருத்தல் கூடாது.
    IV. ஒப்பந்தகாரர் புதுப்பித்த தகவுப் பதிவுப் புத்தகத்தை கேள்வி ஆவணங்கள் பெற முன்னர் ஒப்படைக்க வேண்டும்.
    V. கேள்விதாரர்VAT பதிவு செய்ததன் பிரதியையோ அல்லது VAT பதிவு செய்யப்படாமைக்கான கடிதத்தை ஆணையாளர், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் உறுதிப்படுத்திச் சமர்ப்பிக்க வேண்டும்.
03. ஆர்வமுள்ள கேள்விதாரர் மேலதிக விவரங்களையும், கேள்வி ஆவணங்களையும் இலவசமாக அலுவலக நேரத்தில் நிறைவேற்றுப்பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம் (வ.மா) யாழ்ப்பாணம். (தொ.இல. 021-2222634) பரிசீலிக்க முடியும்.
04. கேள்வி ஆவணங்களை 13.05.2009 தொடக்கம் 22.05.2009 பிற்பகல் 3 மணிவரையும் மீளளிக்கப்படாத கட்டணம் (அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு) பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம் (வ.மா.) யாழ்ப்பாணத்தில் செலுத்தி நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் இருந்து அலுவலக நாள்களில் பெற்றுக்கொள்ளலாம்.
05. மூடிய கேள்விகளை **தலைவர், பிராந்திய கேள்விச்சபை, பிரதமபொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம் (வ.மா.), யாழ்ப்பாணம்** என்னும் முகவரிக்கு 27.05.2009 பிற்பகல் 3 மணிக்கு முன்பாக அனுப்பி வைக்க வேண்டும். உடனடியாக கேள்வி திறக்கப்படும். இந்நேரம் ஒப்பந்தகாரரோ அல்லது அவர் சார்பில் உரித்தளிக்கப்பட்டவரோ சமூகமளிக்க முடியும்.
06. மேற்படி கேள்வி தயாரித்தல், அனுப்புதல் தொடர்பில் ஏற்படும் எந்த செலவீனங்களுக்கும் தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

**பிரதம பொறியியலாளர் அலுவலகம்,**
**கட்டடங்கள் திணைக்களம், (வ.மா.),**
**யாழ்ப்பாணம்.** (சி/558540)

**எந்திரி க.குகநேசன்,**
தலைவர், பிராந்திய கேள்விச் சபை/
பிரதம பொறியியலாளர், யாழ்ப்பாணம்.

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



நாள்கள் 45 ஆகிவிட்டன
நாங்கள் தேடுகின்றோம் எங்கள்
அன்பு மேகலாவையும் விதுஷாவையும்
பாலை ஊரினிலே
பாலசிங்கம் (எஸ்தாக்கி கொன்ஸ்ரன்ரைன்)
தம்பதியர்க்கு பண்பு கொண்டு பிறந்தவளே!
அன்பு கொண்டு அருள்தாசை கரம்பிடித்து
நல்ல கனிகள் நாலு பெற்றெடுத்தாய்
பூவுலகச் சிக்கல்களைப் புன்னகையால் வென்றவளே!
சீர் கெட்டு தறி கெட்டு நிற்கையில்
சீறி வந்த ஷெல் உன் தலையைச் சீவியதே!
பாச மகளையும் படுகாயப்படுத்தி
பாவிகள் நாம் பார்த்திருக்க படுகொலை செய்யப்பட்டீர்கள்
உயிர்களற்ற உங்கள் உடலை- உடனே
புது மாத்தளன் மணலில் புதைத்து விட்டு
தப்பி வந்து அகதிகளாக அடைபட்டு
அழுகின்றோம் அம்மா!
அன்பின் எம் இனிய ஆத்மாக்களே!
ஆண்டவன் அடி சேர
அனுதினமும் பிரார்த்திக்கின்றோம்.

*உங்கள் பிரிவால் வாடி வதங்கும்:*
கணவன், பிள்ளைகள், மருமக்கள், அப்பா,
அம்மா, சகோதரர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள்.
'மேகலா இல்லம்', 2ஆம் குறுக்குத் தெரு, பாலையூர், யாழ்ப்பாணம்.



(85216)

**திருமதி அருள்தாஸ் (பெரியதம்பி-மாதகல்)**
**மேரி கொலற் (மேகலா)**
ஆண்டவன் படைப்பு: 18.11.1978

**செல்வி அருள்தாஸ்**
**அமல பிறின்சியா (விதுஷா)**
ஆண்டவன் படைப்பு: 27.10.2001

அநியாய அழிப்பு: 30.03.2009

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் மணியசேகரம்**
**விக்னேஸ்வரன்** (றஞ்சன்)
(முன்னாள் தலைவர், அரசடி சனசமூக நிலையம்)

*மண்ணில்* 12.06.1965
*விண்ணில்* 06.05.2007

பாசத்தின் திருவுருவே!
பண்பின் உறைவிடமே!
பரந்த இவ்வுலகில் எம்மை விட்டு
பிரிந்து ஈராண்டுகள் ஆனதுவோ
எம்மால் ஜீரணிக்க முடியவில்லை
உம்மை நினைக்கையிலே....

வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு. (சி/558532)

*என்றும் உம் நினைவில்:*
**அரசடி சனசமூக நிலையம்.**

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் மணியசேகரம்**
**விக்னேஸ்வரன்**
(றஞ்சன்)

பூவுலகு: 12.06.1965
விண்ணுலகு: 06.05.2007

சொல்லியழுதால் தீருமோ அப்பா!
சொந்தங்கள் சேர்ந்தழுதால் மாறிடுமோ நம் கவலை
ஆண்டிரண்டுகள் சென்று விட்டது அப்பா!
ஆனாலும் ஆறவில்லை எம் கவலை
உங்கள் கதைகள் எல்லாம் எம் நெஞ்சை
உருக்கிக் கொண்டு செல்லுதப்பா!
நாளாந்தம் உங்கள் நினைவால்
உருகித் தவிக்கின்றோம் அப்பா!
தினம் தினம் அழுகின்றோம் அப்பா!
உங்கள் தரிசனம் காணத் தவிக்கின்றோம் அப்பா!
விடியாத பகலாய் எங்கள் வாழ்வு
விடை காண முடியா தொடர்கதையாகிப் போச்சு

அரசடி வீதி, வடலீயடைப்பு,
பண்டத்தரிப்பு. (சி/558531)

**மனைவி,**
**பிள்ளைகள்.**

## ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
14 . 07 . 1930



மறைவு
22 . 04 . 2000

**அமரர் சின்னத்துரை சோமசேகரம்**
(ஓய்வூதியர், யாழ்.மாநகரசபை)
திதி: சங்கடஹரசதுர்த்தி (13.05.2009)

ஆண்டுகள் ஒன்பது ஓடிமறைந்தாலும்
உம் நினைவுகள் நெஞ்சைவிட்டு அகலவில்லை ஐயா!
அல்லும் பகலும் அயராது உழைத்து,
எமையெல்லாம் ஆளாக்கிய தந்தையே!
உமது ஆத்மா சாந்தி பெற
எல்லாம் வல்ல விநாயகரை வேண்டி நிற்கும்

39/2, புது வீதி,
கோய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(85221)

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் இரத்தினசிங்கம்

சங்கரத்தை, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த நாகலிங்கம் இரத்தினசிங்கம் (09.05.2009) சனிக்கிழமை சிட்னியில் (Sydney-Australia) காலமானார்.

அன்னார் இராசாத்தியின் அன்புக் கணவரும் இராஜசிங்கம், எதிர்வீரசிங்கம், சிங்கராஜசிங்கம் காலஞ்சென்றவர்களான பரராஜசிங்கம், பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாலகிருஷ்ணன் (U.K), சாவித்திரி(U.K), இராஜ்குமார்(U.K), Dr.சாந்தினி(Sydney), தமயந்தி(U.K)ஆகியோரின் அன்புத் தந்தையும் பவாணி, பிள்ளை, பிரேமா, துஷி, சுரேஷ் ஆகியோரின் அன்பு மாமனும் கிருஷ்ணா, விஷினி, ராம், துஷி, பாரத், மீரா, கோபி, மதீபன், அஷ்வின், அபர்ணா, அனுஷன், ஹரினி ஆகியோரின் அன்புப் பேரனும் சாயினின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (12.05.2009) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவுஸ்திரேலியா சிட்னியில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிட்னி,*
*அவுஸ்திரேலியா.*

*தகவல்:*
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் அஞ்சல் பயிற்சிக் கல்லூரி விரைவில் திறந்துவைப்பதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,மே13

யாழ்ப்பாணத்தில் அஞ்சல் பயிற்சிக் கல்லூரி ஒன்றைத் திறந்துவைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ்.பிரதம தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

வடமாகாண பிரதி அஞ்சல் மா அதிபர் வீ.குமரகுரு மேற்கொண்ட முயற்சியின் பயனாக முதன்முறையாக இந்த அஞ்சல் பயிற்சிக் கல்லூரி யாழ்ப்பாணத்தில் திறக்கப்படவுள்ளது.

இந்தப் பயிற்சிக் கல்லூரியைப் பெரும்பாலும் ஜூன் மாத நடுப்பகுதியில் திறந்துவைப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ்.பிரதம தபாலகக் கட்டடத் தொகுதியில் இப்பயிற்சிக் கல்லூரியைத் திறப்பதற்கும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் யாழ்ப்பாணத்தில் இந்த வசதியின்றிக் கொழும்பு சென்று அஞ்சல் பயிற்சியை மேற்கொண்ட உபதபாலதிபர்கள் இக்கல்லூரி திறப்பதன் மூலம் இங்கேயே இதற்கான பயிற்சியைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (203-224)

## 'சிப்தொற' புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பம் கோரல்

கோப்பாய்,மே13

சமுர்த்தி ஆணையாளர் திணைக்களத்தால் 2009ஆம் ஆண்டிற்கான 'சிப்தொற' புலமைப் பரிசில் திட்டத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

2008ஆம் ஆண்டு டிசெம்பர் சாதாரண தரப் பரீட்சையில் கணிதம், தமிழ் ஆகிய பாடங்களில் விசேட சித்தி பெற்றவர்கள் பாடசாலை அதிபரின் சிபார்சுடன் விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களைத் தமது பிரதேச செயலர் பிரிவு சமுர்த்தி அலுவலரிடம் பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-72)

## கப்பலில் கொண்டுவரப்பட்ட தார் மூலம் வீதிகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன

யாழ்ப்பாணம்,மே13

அண்மையில் கப்பல்மூலம் கொண்டு வரப்பட்ட தார் மூலம் வீதிப் புனரமைப்புகள் இடம்பெற்று வருகின்றன என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி ஒருவர் கூறினார்.

வீதிப் புனரமைப்புக்கென அண்மையில் 500 பரல் தார் கப்பல் மூலம் கொண்டு வரப்பட்டது.

இந்தத் தாரைக் கொண்டு குடாநாட்டில் உள்ள பிரதான வீதிகளில் காணப்படும் சேதங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

கடந்த வருட இறுதியில் பெய்த கனத்த மழையினாலும் மற்றும் நிஷா புயலினாலும் வீதிகள் பெரும் சேதப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (203-224)

## தொழிற்பயிற்சி

கோப்பாய்,மே13

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் சமூக சேவைகள், சமூக நலத்துறை அமைச்சின் அனுசரணையுடன் 2ஆம் கட்டமாக 6 மாத கால தொழிற்பயிற்சி இம்மாதம் தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மின்னிணைப்பு, நீர்குழாய் பொருத்துதல் ஆகிய துறைகளிலேயே இப்பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. (203-72)

## பஸ் சேவை சீரின்மையால் மாணவர்கள் பெரும் சிரமம்

வலி.வடக்கு,மே13

யாழ்ப்பாணத்தில் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ்சேவை சீரின்மையால் பாடசாலை மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை வீதி வழியாகச் சேவையில் ஈடுபடும் பாடசாலை பஸ் சேவையே சீரற்ற நிலையில் காணப்படுகின்றது.

நேற்றுமுன்தினமும் ஆண்களுக்கான பஸ்சேவை இடம்பெறாமையால் மாணவர்கள் காத்திருந்துவிட்டு வீடுகளுக்குத் திரும்பிச் சென்றுள்ளார்கள்.

இதேவேளை பாடசாலை மாணவர்கள் ஏனைய பஸ்களில் பாடசாலை செல்ல முற்பட்டாலும் அவர்கள் ஏற்ற மறுத்துச் செல்லும் நிலைமையும் காணப்படுகிறது.

இதேபோன்று மினிபஸ்கள் ஏற்றிச் செல்ல மறுக்கும் நிலைமையும் கூடக் காணப்படுகின்றது.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ்.சாலையில் காணப்படும் பஸ்களுக்குத் தேவையான உபகரணங்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதால் சேவையை சீரான முறையில் நடத்தமுடியாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நெருக்கடிகள் காணப்பட்டாலும் பாடசாலை மாணவர்களின் பஸ்சேவையைச் சீரான முறையில் நடத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனப் பெற்றோர்களும் பாடசாலைச் சமூகமும் கேட்டுள்ளன. (203-86)

## கைதடி முதியோர் இல்லத்தில் தினமும் சத்துணவு வழங்கப்படுகிறது

யாழ்ப்பாணம்,மே13

கைதடி அரச முதியோர் இல்லத்தில் தங்கியிருக்கும் முதியோர்களுக்குச் சத்துணவுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. முதியோர் இல்லத்தில் தங்கியிருக்கும் வயோதிபர்களின் நன்மை கருதி மூன்று நேர உணவுடன் சத்துணவுகளும் வழங்கப்பட்டு வருகின்றது.

குறிப்பாகத் தினமும் பசுப்பால் வழங்குவதுடன் பயறு, கௌபி போன்ற சத்துணவுகளும் வழங்கப்படுகின்றன.

இதனைவிட ஒவ்வொரு 3 வியாழக்கிழமையும் இலைக்கஞ்சி வழங்கப்பட்டு வருகின்றது.

இதேசமயம் சிலர் தாமாகவே முன்வந்து சிற்றுண்டி வகையான வடை, பற்றீஸ் போன்றவற்றையும் முதியோர்களுக்கு வழங்கி வருவதாகவும் இல்ல அத்தியட்சகர் என்.இராசலிங்கம் தெரிவித்தார். (203-224)




## வெளிவாரிப் பரீட்சைக்கு பதிவுகள் மேற்கொள்ளலாம்

யாழ்ப்பாணம்,மே13

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகின் வெளிவாரிப் பரீட்சைகள் - 2008இற்கான கலை முதற்தேர்வு, பொது மற்றும் சிறப்புக் கலைமாணி பகுதி - I, பொது மற்றும் சிறப்புக் கலைமாணி பகுதி - II, சிறப்புக் கலைமாணி பகுதி -III ஆகியவற்றுக்கான பரீட் சைகள் யாழ்.பல்கலைக்கழகத்திலும், வவுனியா வளாகத்திலும் நடைபெறவுள்ளன.

மேற்படி பரீட்சைகளுக்கு தோற்றத் தகுதியான பரீட்சார்த்திகள் யாழ்.பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா 100இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டை வெளிவாரிப்பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவத்தை பெற்றுக்கொள்ளுமாறு பதிவாளர் அறிவித்துள்ளார்.

தபால்மூலம் விண்ணப்பப்படிவத்தைப் பெறவிரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 100இற்கான காசுக் கட்டளை/தபாற் கட்டளையுடன் சுயமுக வரியிடப்பட்ட ரூபா 40 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28x20 செ.மீ அளவுடைய தபால் உறையுடன் உதவிப் பதிவாளர், வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் ஜூன் 30ஆம் திகதிக்கு முன்னதாக ஏற்றுக்கொள்ளப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக விவரங்களுக்கு 021-222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (201)

## பனம் கைப்பணி உற்பத்தியாளருக்கு இம்மாத இறுதியில் போட்டிகள்

நல்லூர்,மே13

பனம் கைப்பணி உற்பத்தியாளருக்கான போட்டிகள் இந்த மாத இறுதியில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் விரிவாக்க உத்தியோகத்தர் கா.கோபால கிருஷ்ணன் தெரிவித்தார்.

பிளாஸ்ரிக் பாவனைகளை ஒழிக்கும் ஒரு முன்னோடி நடவடிக்கையாக இந்தப் போட்டியை நடத்துவதே இதன் முக்கிய நோக்கமென அவர் தெரிவித்தார்.

மக்கள் பாவனைக்கு உகந்த வகையில் பனம்பொருள்களை உற்பத்தி செய்ய ஊக்குவிப்பதும் ஒரு காரணம் எனக் கூறினார்.

பனங் கைப்பணி உற்பத்தியாளருக்கிடையில் முதலில் சந்தைக் கூடை, கண்ணி முடிச்சுக் கூடை, ஈக்கில் கூடை போன்றவற்றைப் பின்னும் போட்டிகள் நடத்தப்படவுள்ளதாகக் கூறப்பட்டது. (203-111)

## இடம்பெயர்ந்த மாணவர்கள் கல்வி பயில மிருசுவிலில் பாடசாலை திறப்பு

யாழ்ப்பாணம்,மே13

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து யாழ். மாவட்டத்தில் தங்கியுள்ள மாணவர்கள் கல்விச் செயற்பாடுகளை ஆரம்பிக்க மிருசுவிலில் பாடசாலை ஒன்று நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மிருசுவில் றோ.க.பாடசாலைக்கு சமீபமாக இந்தப் பாடசாலையை யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் நேற்றுமுன்தினம் ஆரம்பித்துவைத்தார்.

அங்கு கல்வி பயிலவிருக்கும் மாணவர்களுக்கு புத்தகங்கள், சீருடைகள் ஆகியன வழங்கப்பட்டுள்ளன என்று அரச அதிபர் தெரிவித்தார்,

சுமார் 490 மாணவர்கள் இந்தப் பாடசாலையில் தங்கிப் பயிலவிருக்கின்றனர்.

பாடசாலைக்குத் தேவையான தளபாடங்கள், உபகரணங்கள் ஆகியனவும் வழங்கப்பட்டுள்ளன. (1-224-131)

## மின்கட்டணம் நிலுவையில் உள்ளோருக்கான மின்சார விநியோகம் சாவகச்சேரியில் துண்டிப்பு

யாழ்ப்பாணம்,மே13

இலங்கை மின்சார சபையின் சாவகச்சேரி அலுவலகம் கூடுதலான மின் கட்டணத்தைக் கொண்ட மின்பாவனையாளர்களின் மின்சார வழங்கலைத் துண்டித்து வருகின்றது.

சாதாரணமாக ஆயிரம் ரூபாவுக்கு மேல் மின்கட்டண நிலுவையாகவுள்ள மின் பாவனையாளரது மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கு மின்சார சபையால் அறிவித்தல் கொடுத்து ஒரு வாரம் கடந்த பின்னர் மின் துண்டிப்பு செய்யப்பட்டு வருகிறது.

மின்பாவனையாளர்கள் தமது நிலுவைகளைத் தபாலகங்களிலோ அல்லது வங்கிகளிலோ செலுத்தி மின்வெட்டினைத் தவிர்க்குமாறு மின் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

தமது மின்கட்டணங்களை மாதாந்தம் செலுத்துவதனூடாக நிலுவையைத் தவிர்த்துக்கொள்ளலாம் எனத் தெரிவித்தார். (203-131)



யாழ்.பல்கலைக்கழக புவியியல் கழகத்தின் 'யாழ்ப்பாணப் புவியியலாளன் இதழ் - 20, திட்டமிடல் இதழ்கள்' ஆகியவற்றின் வெளியீட்டு விழா நிகழ்வு புவியியல்துறை மண்டபத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

புவியியல்துறைத் தலைவர் பேராசிரியர் கா.குகபாலன், கலைப்பீடாதிபதி எஸ்.சிவலிங்கராஜா, வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் உரையாற்றுவதை முதல் மூன்று படங்களிலும் காணலாம்.

யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் என்.சண்முகலிங்கனிடம் இருந்து பேராசிரியர் ப.புஸ்பரத்தினம் நூலின் பிரதியைப் பெற்றுக்கொள்வதை நான்காவது படத்திலும் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் போதிய வசதிகள் இல்லாத நிலையிலும் மூலிகைகளைப் பேணிப் பாதுகாத்துவரும் பரம்பரை வைத்தியர்



உருண்டோடிக் கொண்டிருக்கின்ற இந்த நவீன யுகத்தில் எமது பாரம்பரிய விழுமியங்கள் செத்துக்கொண்டிருக்கின்றன என்ற ஏக்கம் எம் மனங்களில் தாக்கங்களை ஏற்படுத்திக்கொண்டிருந்த

## இணுவில் சந்திரமோகனுடன் ஒரு சந்திப்பு

போதிலும் அந்தப் பாரம்பரிய விழுமியங்களைப் பேணிப் பாதுகாக்கின்றவர்களும் எம் மத்தியில் இன்னும் இருக்கத்தான் செய்கிறார்கள் என்பது நினைக்கும்போது ஒரு வித ஆறுதல் ஏற்படத்தான் செய்கின்றது.

அண்மையில் லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியில் 'சுதேச மருத்துவமும் மாநாடும் கண்காட்சியும்' இடம்பெற்ற



மூலிகைகளைப் பராமரிக்கும் உறுப்பினர்கள்

போது அங்கு மூலிகை பாதுகாப்புச் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டிருந்த மூலிகை வகைகளின் சங்கமத்தினைக் கண்டு நாம் பிரமித்துப் போனோம்.

நூற்றுக்கணக்கான மூலிகைகளை தனியொரு நபர் பேணிப் பாதுகாத்து வருகின்றார் என்பதை அறிந்தோம். இத்தகைய அரும்பெரும் சேவையினை ஆற்றி வருகின்ற அவரை 'உதயன்' வாசகர்களுக்கு அறிமுகம் செய்துவைப்பதற்காக அவரின் செவ்வியொன்றினைத் தொகுத்து இங்கு தருகின்றோம்.

இணுவில், காரைக்கால் வீதியில் வசித்து வருகின்ற பரம்பரை வைத்தியர் 30 வயது

**சந்தித்தவர்: கவிநேசன்**

டைய செல்வராசா சந்திரமோகன் இவர்தான் மூலிகைப் பாதுகாப்புச் சங்கத்தின் தலைவரும் ஸ்தாபகருமாவார்.

இவர் தனது மூலிகைப் பாதுகாப்புச் சங்கத்தின் செயற்பாடு தொடர்பாகப் பின்வருமாறு விவரிக்கிறார்.

**கேள்வி:** மூலிகைகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கம் எவ்வாறு உருவானது?

**பதில்:** எனது அம்மாவின் பெற்றோர் பரம்பரை சித்த ஆயுள்வேத வைத்தியர்கள். அவர்களைப் பின்பற்றி நான் பரம்பரை வைத்தியத் தொழிலைச் செய்து வருகிறேன்.

ஆரம்பத்தில் எனது தொழில் ரீதியாகச் சில மூலிகைக் கன்றுகளைப் பாதுகாத்து வந்தேன். பின்னர் எமது பாரம்பரிய வைத்தியத்துக்குப் பயன்படுகின்ற இத்தகைய மூலிகைகளைப் பாதுகாக்கவேண்டும் என்ற எண்ணம் எனக்குள் தோன்றியது. கிட்டத்தட்ட 3 வருடமாக மூலிகைகளைத் தேடித் தேடி இற்றைவரை 800 வகையான மூலிகைக் கன்றுகளைப் பாதுகாத்து பராமரித்து வருகின்றேன்.

**கேள்வி:** மூலிகைக் கன்றுகளை எங்கெல்லாம் தேடிச் சேமித்தீர்கள்?

**பதில்:** சில மூலிகைகளை எனக்குத் தெரிந்த சித்த ஆயுள்வேத வைத்தியர்கள் தந்துதவினார்கள். சில மூலிகைகளை இந்தியா, மலையகம் போன்ற இடங்களிலும் தீவுப் பகுதிகளிலிருந்து எனது சொந்தப் பணத்தில் பெற்றுக்கொண்டேன். ஒவ்வொரு மூலிகைகளையும் பெரும் சிரமத் திற்கு மத்தியிலேதான் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது.

**கேள்வி:** மூலிகைகளையெல்லாம் பைக்கற்றுகளில் வைத்துள்ளீர்கள். இவற்றினை எல்லாம் இணைத்து மூலிகைத் தோட்டம் ஒன்றை அமைக்கவேண்டும் என்று எண்ணம் தோன்றவில்லையா?

**பதில்:** இந்த அரும்பெரும் மூலிகைகள்தான் எனது சொத்துக்கள். எனது சொந்தப் பிள்ளைகளைப் போல பராமரித்து வருகிறேன். இவற்றினை மூலிகைத்தோட்டம் ஆக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்குள் இருக்கிறது. ஆனால் நான் குடியிருப்பது கூட வாடகை வீடு எனக்கென்றொரு காணியில்லை. எமது மூலிகைப் பாதுகாப்பு சங்கத்துக்கென யாராவது சமூக நலன் விரும்பிகள் காணியினைத்தந்து உதவினால் இந்த மூலிகைகளைக் கொண்டு பாரியதொரு மூலிகைத் தோட்டம் என்னால் உருவாக்க முடியும்.

**கேள்வி:** மூலிகைகளைப் பார்வையிடுவதற்காக உங்களிடம் யாராவது வந்தால்..?

**பதில்:** குடாநாட்டில் உள்ள சித்த வைத்திய துறைசார் வைத்தியர்கள், மாணவர்களெல்லாம் வருகை தந்து மூலிகைகளைப் பார்வையிட்டுச் செல்வார்கள். அதேநேரத்தில் மூலிகைகளின் பயன்பாடுகள் தொடர்பான விடயங்களையும் எங்களிடத்தில் கேட்டுத் தெரிந்து கொள்வார்கள். அத்துடன் சித்த வைத்தியத்துறை சார் வைத்தியர்கள் நோயாளிகளுக்கு மூலிகை மருந்துகளை எழுதிக்கொடுக்கின்றபோது மிகவும் அரிதான மூலிகைகளை எம்மிடம் வந்து பெற்றுச் செல்வார்கள்.

**கேள்வி:** மூலிகைகளைப் பராமரிப்பதற்கு உங்களுக்கு யாராவது பக்கபலமாக உள்ளார்களா?

**பதில்:** ஆம். ஒரு சில இளைஞர்கள் எதுவித ஊதியத்தையும் எதிர்பாராது இரவுபகலாக மிகவும் அர்ப்பணிப்புடன் என்னுடன் இணைந்து மூலிகைகளைப் பராமரிக்கும் பணியில் ஈடுபடுகிறார்கள். அதாவது சூ.கயூரன், கே.டெனிஸ்ரன், என்.கனகேஸ்வரன், இ.கிருஷ்ணராஜ், தி.நிரோஜன், தி.கபிலேந்திரா, எஸ்.கிருஷ்ணவக்சன், கெ.கஜானன் இவர்களுடன் வைத்தியர் தாமோதரம்பிள்ளை, வைத்தியக் கலாநிதி ஞா.வீரசிங்கம் ஆகியோரும் எனக்குப் பக்கபலமாக நின்று உதவுவதுடன் தகுந்த ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றனர்.



மூலிகைகளின் சங்கமம்

மூலிகைகளுக்கு தண்ணீர் ஊற்றும் பணியினை எஸ்.அன்ரனிதாஸ் ஐயா மிகவும் குறைந்த ஊதியத்தில் சேவை மனப்பாங்குடன் செய்து வருகிறார்.

**கேள்வி:** உங்களுடைய எதிர்காலத் திட்டம் பற்றி?

**பதில்:** இதுவரை 800 வரையான மூலிகைகளைப் பராமரித்து வருகிறேன். எனது முப்பதாவது வயது எதிர்வரும் செப்ரெம்பர் மாதம். அதற்கிடையில் 1000 மூலிகைக் கன்றுகள் சேமித்து 'ஆயிரம் மூலிகைகளின் ஆபூர்வ சங்கமம்' என்ற நூலினை வெளியிடத் தீர்மானித்துள்ளேன்.

அதில் ஒவ்வொரு மூலிகையினதும் படத்தினைப் பிரசுரித்து அது தொடர்பான பயன்பாடுகளும் அதில் குறிப்பிட்டு புத்தகத்தை வெளியிடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருகிறேன்.

**கேள்வி:** இறுதியாக என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

**பதில்:** என்னைப் பொறுத்தவரை இந்த மூலிகைகள் எங்கள் துறைசார் சொத்துக்கள். குடாநாட்டில் எந்த மூலையிலாவது மூலிகைகள் ஏதாவது இருப்பின் எம்முடன் தொடர்பு கொண்டு அதனை எமக்கு வழங்கி உதவினால் அத்தகைய மூலிகையினை நாம் சிறந்த முறையில் பராமரித்து பலருக்குப் பயன்பெறக்கூடிய வகையில் உதவலாம் என்பது எனது அபிப்பிராயம்.

நான் பாரம்பரிய மூலிகைகள் மட்டுமன்றி சித்த வைத்தியத்துறை சார் பழைய பொருள்கள், பழைய சித்த வைத்தியர்களின் படங்கள் அவர்களின் வாழ்க்கை வரலாறுகள், அவர்கள் பாவித்த பொருள்கள் எனப் பல்வேறு எமது பாரம்பரிய சொத்துக்களையெல்லாம் பேணிப் பாதுகாத்து வருகிறேன்.

இந்த நவீன யுகத்திலும் தங்களுக்கு கிடைக்கும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி ஓர் இளம் சமுதாயத்தை ஒன்றுதிரட்டி இத்தகைய காத்திரமான, ஆக்கபூர்வமான பணியினை முன்னெடுக்கும் உங்கள் பணிசிறக்கட்டும் வளரட்டும் என்று வாழ்த்துக்களைக் கூறிக்கொண்டு அவரிடமிருந்து விடைபெற்றோம். ★

---

சிவமயம்

## ருதுசோபன முகூர்த்த அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான விரோதி வருஷம் சித்திரைத் திங்கள் 31ஆம் நாள் (14.05.2009) வியாழக்கிழமை முற்பகல் 11.25 மணி முதல் 12.25 வரையுள்ள பஞ்சமித் திதியும், உத்தராட நட்சத்திரமும், சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்தத்தில்

கோண்டாவில் குமரகோட்டம் ஞானவைரவர், சித்தி வைரவர் அம்பாள் கோயில் பிரதமகுரு சோ.சுப்பிரமணிய குருக்கள் தம்பதியரின் பௌத்திரியும் சுழிபுரம் பறாளாய் சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் பிரதமகுரு மு.பாலகுருசாமி சர்மா தம்பதியரின் தௌஹித்திரியும்

எமது ஜேஷ்ட புத்திரியுமான

**திருவளர் செல்வி விந்தியா** (சுரபி)

அவர்களுக்கு

இறைவன் திருவருள் துணைகொண்டு எமது இல்லத்தில் ருதுசோபன வைபவம் நடத்த பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து செல்வியை ஆசீர்வதித்து வைபவத்தை சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். திரு.திருமதி பிரம்மஸ்ரீ சு.வரதராஜசர்மா-சுதாமதியம்மா குடும்பத்தினர்.

தொ.பே.:021 4590453 (சி/558530)

---

## சைவ வித்தியா விருத்திச் சங்கம் ஆண்டுப் பொதுக்கூட்ட அறிவித்தல் - 2009

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் 30.05.2009 சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறும் என்பதை அறியத் தருகின்றேன்.

சைவ வித்தியா விருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி, திருநெல்வேலி.

செயலாளர்.

(சி/558536)

---

## கண்ணீர் அஞ்சலி

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் பணிப்பாளர்

**சின்னத்தம்பி பத்மராஜா**

அவர்களின் அன்புத் தந்தை

### வேலுப்பிள்ளை சின்னத்தம்பி

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சைவ வித்தியா விருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

பணிப்பாளர் சபை
உறுப்பினர்கள்,
பணியாளர்கள், இல்லச் சிறார்கள்.

(சி/558537)

---


## COMPUTER EXPRESS

Institute of Information Technology

No 167, Kasthuriyar Road, Jaffna. 0212228250

Branch : No 07, Science center Road, Nelliyadi.

மாபெரும் புலமைபரிசில்திட்டம் – 2009

| Course | Duration | Old price | Price |
|---|---|---|---|
| Diploma in Microsoft Office | 3 Months | | 2500/= |
| Diploma in Desktop Publishing | 4 Months | 13000/= | 3000/= |
| Diploma in Web page Designing | 3 Months | 15750/= | 3150/= |
| Diploma in Graphic Publishing | 4 Months | 15750/= | 3150/= |
| Diploma in Hardware Engineering | 3 Months | 15000/= | 3000/= |
| Diploma in AutoCAD | 3 Months | 15000/= | 3000/= |
| Accounting Package (Quick Book) | 3 Months | 15750/= | 3150/= |
| Diploma in Computer Science | 4 Months | 15750/= | 3150/= |
| Honors Diploma in Computer Science | 4 Months | 18000/= | 3600/= |

50%Off

ADVANCE COURSES

Diploma in Video Editing 4250/=

Diploma in Multimedia 3750/=

computer express ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும், சர்வதேச தரம்வாய்ந்த சான்றிதழ்கள், ... செயல்முறைப்பயிற்சி

வகுப்புக்கள் ஆரம்பம்

Batch

I :14/05/2009 - 11AM

II :16/05/2009 - 09AM/02PM

III:17/05/2009 - 09AM/02PM

IV :18/05/2009 - 03PM

IV :21/05/2009 - 11AM


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ். தேசிய கல்வியியற் கல்லூரிக்கு இவ்வாண்டு தெரிவானோர் விவரம்

யாழ்ப்பாணம், மே 13

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரிக்கு புதிய கல்வியாண்டுக்குத் தெரிவு செய்யப் பட்டுள்ள மாணவர்களின் விவரம் வெளி யிடப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்டவர்கள் உரிய படி வங்களையும் நியமனக்கடிதத்தையும் நாளை 'வியாழக்கிழமை முதல் கல்லூரி யில் பெற்றுக்கொள்ளலாம் என பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் அறிவித்துள்ளார்.

தெரிவானவர்களை, எதிர்வரும் 27 ஆம் திகதி காலை 9 மணிக்கு பதிவு செய்வதற் காக உரிய ஆவணங்களுடனும் விடுதியில் தங்குவதற்கான ஆயத்தங்களுடனும் பெற்றோருடன் உரிய நேரத்துக்கு முன்பாக கல்லூரிக்கு வருகை தருமாறு அவர் கேட் டுள்ளார்.

தெரிவான மாணவர்களின் விவ்ரம் வருமாறு:-

**சங்கீதம்**

கே.கஜந்தினி-காரைநகர், எஸ். யாழினி -சுன்னாகம், எம்.ஜனனி-ஏழாலை, என். பிரதா - கரணவாய் வடக்கு, எஸ்.சிந்து - அள வெட்டி, எஸ். சிவரூபா - கரவெட்டி, வை.சசிந்தா - சாவகச்சேரி, யு.நாகதர்சினி - அராலி, இ.றூபினி - கரம்பொன் கிழக்கு, ரி.நிஷாந்தினி - மட்டுவில் -

**நடனம்**

வி.ஹேமராதா-சித்தன்கேணி, எம்.எஸ். ஜெயராணி - இணுவில், உஷாநந்தினி - ஆனைக்கோட்டை, ஏ.கனிதீபா - ஏழாலை, எம்.வாசுகி -தாவடி, பி.சர்மிளா - மந்துவில், வி.எஸ். ருஷியாந்தி - சுன்னாகம் , ஆர். பிரிங்கா - மல்லாகம், ரி.டிலுக்ஸி ஆன்ஸி - கோப்பாய், வி.ஜசிந்தா - கொக்குவில் -

**நாடகமும் அரங்கியலும்**

பி.பகிர்பரன்-பொன்னாலை, எஸ்.கிருஷ் ணானந்தினி-பண்டத்தரிப்பு, ரி.நிதர்ஷன் - சண்டிலிப்பாய், பி.கிருஷிகா - ஏழாலை, பி.கஜமுகன் - பண்ணாகம், ஆர்.விஜயதர் சினி - கரவெட்டி, எஸ்.எட்வின்ராஜ் - குரு நகர், என்.தர்னி-வடலியடைப்பு, பி.யூட் கமில்ரன் - யாழ்ப்பாணம், ஏ.டினேஷன் -மானிப்பாய்-

**கணிதம் (ஆங்கில மொழி மூலம்)**

எஸ்.ராதை - உடுவில், ரி.சரணியா - வல்வெட்டி, வை.சஜீவன் - கொடிகாமம், எஸ்.சாந்தி - வல்வெட்டித்துறை, ரி.பிரியா - மீசாலை, கே.ஜீவிதா-கந்தர்மடம், எஸ்.தினேஷ் - மிருசுவில், என்.யாழினி - சுன்னாகம் -

**ஆரம்பக் கல்வி**

வை.ஹர்சினி-கொடிகாமம், எஸ். ஜீவிதா - வண்ணார்பண்ணை, எஸ்.பாலரமணன் - மானிப்பாய், பி.சுபித்திரா - சுழிபுரம், என்.விஜயரட்ணம் - சாளம்பை, பி.ரஜிந் தன் - வேலணை, பி.கெமினி - கந்தரோடை, ஏ.கஜனி - சாவகச்சேரி, பி.மயூரன் - சுது மலை, எஸ்.நிலானி - மீசாலை, ஆர்.நிலக் ஷனா - உரும்பிராய், ரி.ஞானகிரி - கோண்டாவில், பி.சுகந்தி - பொலிகண்டி, என்.சசிகரன்-தெல்லிப்பழை, எஸ்.ரூபினி - பருத்தித்துறை, பி.அனுஷிகா - திரு நெல்வேலி -

**விசேட கல்வி**

எஸ். துஷாந்தி - திருநெல்வேலி, ஜெ.நீரஜா - நல்லூர், எஸ்.சிவசங்கர் - நீர் வேலி, ஆர்.ஜெயமதன்-அரியாலை, எஸ்.சுதரியன்- கரவெட்டி, ஆர்.விஜயநிதி -உடுவில், எம்.தனேஸ்வரன் - உரும் பிராய், எஸ். வினோதரன் -உரும்பிராய், எஸ்.பாலரமணன் - மானிப்பாய், வி.சுபித் திரா - சுழிபுரம், வி.றஜிந்தன் - வேலணை, என்.அனுஜா - சுழிபுரம், ஆர்.நிலக்ஷனா -உரும்பிராய், வி.உமா-அல்வாய், எஸ்.சிவ ராமலிங்கம் -வதிரி -

**விஞ்ஞானம் (ஆங்கில மொழி மூலம்)**

தினேஷ் மணிவண்ணன் -உரும்பிராய், பத்மநாதன் கம்ஷவாகினி-கந்தர்மடம், துவாரகா புஸ்பராஜா-கோண்டாவில், மனோ கரன் சந்துரு-உரும்பிராய், கிருஸ்ண சாந்தி கிட்ணசாமி-யாழ்ப்பாணம், செல் வராஜ் கோபிநாத்-மானிப்பாய், சங்கீதா சிவப்பிரகாசம் -பருத்தித்துறை, சோபனா கமலநாதன் - யாழ்ப்பாணம், நதியா விஜய ரட்ணம் -பருத்தித்துறை, கார்த்திகா இன்ப ராசா - குடத்தனை, இராசையா கௌசினி - ஊரெழு, ஜெகநாதன் சேந்தன் - புத்தூர், மகேந்திரன் பபிதா -கந்தரோடை.

(1)

# கைதடி நலன்புரி நிலைய மாணவருக்கு கல்விச் செயற்பாடுகள் திங்கள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 13

கைதடி நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மாணவர்களுக்கான கல்விச் செயற்பாடுகள் எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளன.

கைதடி மத்திய மருந்தகத்திற்கு அரு கில் அமைக்கப்பட்டுள்ள வகுப்பறைத் தொகுதிகளில் கற்பித்தல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வலயக் கல் விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறி வித்துள்ளார்.

இந்த நிகழ்வில் யாழ். அரச அதிபர் உட் பட பலர் கலந்துகொள்ளவுள்ளதாகவும் தெரியவருகிறது. (1-207)

# தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த குடும்பஸ்தர் அவரது வீட்டில் சுட்டுக்கொலை

## கொக்குவில் மேற்கில் திங்கள் இரவு சம்பவம்

யாழ்ப்பாணம், மே 13

கொக்குவில் மேற்கு, கேணியடிப்ப குதியில் நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணியளவில் வீட்டில் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் இனம் தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அதே இடத்தைச் சேர்ந்த வி.பிரதீபன் (வயது 33) என்பவரே சுட்டுக்கொல்லப் பட்டவராவார்.

கொலையுண்டவர்தமது வீட்டில்தொலைக் காட்சி பார்த்துக் கொண்டிருந்த போது மோட் டார் சைக்கிளில் வந்த ஆயுத தாரிகள் அவ ரைச் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றனர் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.நீதிவான் சம்பவ இடத்தில் விசா ரணை நடத்திய பின்னர் சடலம் பிரேத பரிசோதனைக்காக நேற்று முற்பகல் 11 மணியளவில் யாழ்.ஆஸ்பத்திரிக்கு அனுப் பப்பட்டது. (அ-1-78-25)

# தனியார் பஸ்களில் அடுத்த மாதம் முதல் 'ரிக்கெற்' வழங்குவதற்கு முடிவு

யாழ்ப்பாணம், மே 13

தனியார் பஸ்களில் பயணம் மேற் கொள்ளும் பயணிகளுக்கு அடுத்த மாதத் தில் இருந்து கட்டணச்சீட்டுகள் (ரிக்கெற்) வழங்கப்படவுள்ளன.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற தனியார் பஸ் உரிமையாளர் கள், சாரதிகள், நடத்துநர்கள் ஆகியோருக் கான கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப் பட்டது.

தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தி னால் ஏற்பாடு செய்யப்பட்ட இக் கூட்டத் தில் யாழ். செயலக மோட்டார் போக்கு வரத்துத் திணைக்கள அதிகாரிகள், இரா ணுவ மற்றும் பொலிஸ் அதிகாரிகள் ஆகி யோரும் கலந்துகொண்டனர்.

தனியார் பஸ்களில் பயணம் மேற் கொள்ளும் மக்களுக்கு அடுத்த மாதம் தொடக்கம் 'ரிக்கெற்' வழங்குவது நடை முறைக்குக் கொண்டுவரப்படவுள்ளன.

அத்துடன் மினி பஸ்களில் அளவுக்கு அதிகமான மக்களை ஏற்றிச் செல்ல வேண்டாம் என்றும் கூட்டத்தில் வலி யுறுத்தப்பட்டுள்ளது. (1-224)

# பாக். இராணுவத்துடன் தலிபான்கள் மோதல் ஆயிரக் கணக்கில் மக்கள் இடம்பெயர்வு

## உதவிக்கு ஐ.நா. விரைவு

நியூயோர்க், மே 13

''பாகிஸ்தானின் வட - மேற்கில் தலிபான் தீவிரவாதிகளுக்கும், இராணுவத்துக்கும் இடையே நடைபெற்றுவரும் கடும் சண் டையால் இடம்பெயர்ந்துள்ள ஆயிரக்க ணக் கானோருக்கான ஐ.நாவின் மனிதாபி மான உதவிகள் அதிகரிக்கப்படும் என அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகர் அன்டோனியோ கடிரஸ் தெரிவித்துள்ளார்.

''பாகிஸ்தானில் இடம்பெயர்ந்தோருக் கான மனிதாபிமான உதவிகள் அதிகரிக் கப்படும். இப்புதிய உதவித் திட்டத்தின் கீழ் பிளாஸ்டிக் கூரைத் தகடுகளும், 10 ஆயி ரம் நுளம்பு வலைகளும் விநியோகிக்கப் படும். கள நிலை களஞ்சியசாலைகளும் நிறுவப்படும்'' என்றும் அவர் குறிப்பிட் டுள்ளார்.

''பாகிஸ்தானின் வட - மேற்கில் இம் மாதம் சண்டை ஆரம்பமாகியது. அது முதல் இதுவரை 3 இலட்சத்து 60 ஆயிரம் பாகிஸ்தானியர் அப்பகுதிகளிலிருந்து வெளியேறியுள்ளனர். மேலும் வெளியேறு வோரின் எண்ணிக்கையும் துரிதமாக அதி கரித்து வருகிறது. சர்வதேச சமூகத்தின் உதவி இவர்களுக்குத் தேவை'' என்றும் உயர் ஸ்தானிகர் வலியுறுத்திக் கூறி யுள்ளார்.

''வெளியேறியோரில் 3 லட்சத்து 60 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் எமது முகவர் நிறுவனத்தில் தம்மை பதிவு செய்துள்ள னர். இன்னும் பெருவாரியானோர் தம்மை பதிவு செய்துகொள்ளவில்லை. அதேவேளை, யுத்தப் பிராந்தியத்திலிருந்து வெளியே றும் குடியிருப்பாளர்களின் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது'' என்றும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

''அண்டைநாடான ஆப்கானிஸ்தா னில் பல தசாப்தங்களாக உள்நாட்டுக் கல வரங்கள் மூண்டு வந்துள்ளன. இவற்றால் அந்நாட்டைவிட்டு வெளியேறி, லட்சக்கணக் கான ஆப்கானிஸ்தானியர் அகதிகளாக பாகிஸ்தான் வந்தடைந்துள்ளார்கள். அவர் களை பெருமனதோடு ஆதரித்து வந் துள்ள அதே பாகிஸ்தானியர்கள் இன்று தாங்களும் அகதிகளாகியுள்ளார்கள்'' என் றும் உயர் ஸ்தானிகர் சுட்டிக்காட்டியுள் ளார்.

''தற்போது இடம்பெயர்ந்துள்ள பாகிஸ் தானியருக்கான மனிதாபிமான உதவித் திட்டங்களுக்கும், சர்வதேச சமூகமும் அதே ஆதரவையும் ஒத்துழைப்பையும் அளிக்க வேண்டும். ஆப்கான் அகதிகளுக்கு இம் மக்கள் காட்டிய அதே மனிதநேயம் இவர்க ளின் அவலத்திலும் காட்டப்படவேண்டும்'' என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

''தற்போது கையிருப்பிலிருந்து பெரு வாரியான அகதிகளுக்கு கூடாரங்கள், சமையற் பாத்திரங்கள், பாய்கள், போர்வை கள் ஆகியவை உட்பட பல பண்டங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. அடிப்படை விநியோகப் பொருள்கள் மேலும் தேவை'' என ஐ.நா. முகவர் நிறுவனம் தெரிவித் துள்ளது.

# ஆப்கானிலுள்ள அமெ. படையின் உச்சமட்டத் தளபதி பதவி நீக்கம்

ஆப்கானிஸ்தானில் நிலைகொண்டுள்ள அமெரிக்க இராணுவத்தின் உச்சமட்டத் தளபதி ஜெனரல் டேவிட் மெகிர்னான் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். இவர் கட் டளைத் தளபதியாக பதவியேற்று இன் னும் ஓராண்டு நிறைவடையவில்லை.

ஜெனரல் டேவிட் மெகிர்னானை உட னடியாக பதவியிலிருந்து விலகி விடுமாறு பாதுகாப்பு அமைச்சர் உத்தரவிட்டார். அதற்கிணங்க அவர் பதவி துறந்தார்.

இராணுவ நடவடிக்கைகளில் அப்பாவி களான பொதுமக்கள் பலியாகி வருவதை யொட்டி அமெரிக்காவுக்கும் ஆப்கானிஸ் தானுக்குமிடையே முறுகல் நிலை தோன் றியுள்ள ஒரு தருணத்தில் அமெரிக்க உச்ச மட்டத் தளபதி நீக்கப்பட்டுள்ளார்.

# குட்டி விமான விபத்தில் அமெரிக்காவில் அறுவர் பலி

அமெரிக்காவிலுள்ள மிர்தன் என்னுமிடத் தில் தனியாருக்குச் சொந்தமான குட்டி விமானமொன்று விழுந்து நொறுங்கி விபத் துக்குள்ளானதில் 6 பேர் பலியாகினர்.

இவ்விமானம் புறப்பட்ட 10 நிமிடங்களில் இது கீழே விழுந்து நொறுங்கியது. இதில்ஒரு விமானியும், ஐந்து பயணிகளுமிருந்தார் கள். அனைவரும் விபத்தில் உயிரிழந்தனர்.

# அமெ. பெண் ஊடகவியலாளர் ஈரானிலிருந்து விடுதலை



தெஹ்ரான்,மே13

ஈரானில் வேவு பார்த்த குற்றச் சாட் டின் பேரில்தண் டனை விதிக்கப் பட்டு, சிறையில் அடைக்கப்பட்ட அமெரிக்க - ஈரானிய பெண் ஊடகவி யலாளர் ரொக்ஸனா சபேரி, தண்டனைக் காலம் குறைக்கப்பட்டமையால் விடு தலை யானார்.

அமெரிக்காவுக்காக உளவு பார்த்தார் என இவர் மீது குற்றஞ் சுமத்தப்பட்டது. இது தொடர்பான விசாரணை ஏப்ரலில் ஈரான் நீதிமன்றமொன்றில் நடைபெற்றது. நீதிவான் விசாரணை முடிவில் எட்டு வருடகால சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

சிறைத் தண்டனை குறைத்தமையை அடுத்து சபேரி விடுதலை செய்யப்பட்டார்.

# ஈராக்கில் அமெ. சிப்பாய் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 5சகாக்கள் பலி

வாஷிங்ரன், மே 13

ஈராக்கின் தலைநகரான பக்தாத்தி லுள்ள இராணுவத் தளமொன்றில் அமெ ரிக்க இராணுவச் சிப்பாய் ஒருவர் தனது ஐந்து சக சிப்பாய்களைச் சுட்டுக் கொன் றுள்ளார். மற்றுமிரு சிப்பாய்கள் படுகாய மடைந்துள்ளனர் என பென்டகன் அதிகாரி கள் தெரிவித்தார்கள்.

இச்சம்பவம் தொடர்பாக இராணுவ அறிக்கையொன்றும் வெளியிடப்பட்டுள்ளது. நிலையத்துக்கருகிலுள்ள கேம் லிபர்ட்டி யில் இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. சம்பந்தப்பட்ட சிப்பாய் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக் கப்பட்டுள்ளார்'' என குறிப்பிடப்பட்டுள்ளது.

''அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா இத்துப்பாக்கிப் பிரயோக சம்பவத்தைக் கேள்வியுற்று அதிர்ச்சியடைந்தார். இது பயங்கரமான ஒரு துயரச் செய்தி என அவர் குறிப்பிட்டார்'' என வெள்ளை மாளிகை தெரிவித்தது. ஜனாதிபதி இச்சம்பவம் குறித்து, பாதுகாப்பு அமைச்சர் ரொபர்ட் கேட்ஸுடன் விவாதிக்கவுள்ளார் என பேச் சாளர் ரொபர்ட் கிப்ஸ் தெரிவித்தார்.

''இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் முகாமைச் சேர்ந்த மருத்துவச் சிகிச்சை நிலையத்தில் இடம்பெற்றது. சிப்பாய்கள் தங்களின் தனிப்பட்ட மன அழுத்தங்கள், சண்டையால் ஏற்பட்ட அதிர்ச்சி ஆகிய வற்றிற்கும் இங்கு சிகிச்சை பெறுவார்கள். துப்பாக்கிப் பிரயோகம் செய்தவரும் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டவராக இருக் கலாம்'' என ஓர் அதிகாரி குறிப்பிட்டார்.

அமெரிக்க இராணுவச் சிப்பாய் ஒருவர், சக சிப்பாயைச் சுட்டுக் கொல்வது இது முதல் தடவை அல்ல. குவைத்திலிருந்த இராணுவ முகாமில் ஒரு சிப்பாய், கிரனேட் தாக்குதல் நடத்தியும் ரைபிளால் சுட்டும் இரு இராணுவ அதிகாரிகளைக் கொன்றுள் ளார். 14 சிப்பாய்கள் இத்தாக்குதலில் படு காயமடைந்துள்ளார்கள். தாக்குதல் நடத் திய சிப்பாய்க்கு 2005 ஆம் ஆண்டு இரா ணுவ நீதிமன்றத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்கந்தாவில் சைக்கிள் பாதுகாப்பு நிலைய கூரை திடீரென முறிந்து வீழ்ந்தது

வலி.வடக்கு, மே 13

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்துக்கு அருகில் இருந்த துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையத்தின் கூரை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை திடீரென முறிந்து விழுந்த போதும், அதன்கீழ் இருந்த ஆசிரியர்களும் மாணவர்களும் தெய்வாதீனமாக காயங்கள் எதுவும் இன்றித் தப்பித்துக் கொண்டனர். இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

பாடசாலை மைதானத்தில் யாழ்.மத்திய கல்லூரிக்கும் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் இடையேயான துடுப்பாட்டப் போட்டிஒன்றுநடைபெற்றுக்கொண்டிருந்தது.

இதே நேரம் மேற்படி துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையத்தில் பெருமளவு மாணவர்களும் ஆசிரியர்களும் இருந்த போது, நண்பகல் 12.40 மணியளவில் குறித்த நிலையத்தின் கூரை திடீரென முறிந்து வீழ்ந்தது. இதனால் அங்கு நின்ற பல துவிச்சக்கர வண்டிகள் சேதத்துக்குள்ளாகியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. மேற்படி கல்லூரியில் இது போன்று உடைந்து விழும் நிலையில் பல கட்டடங் கள் இருப்பதாகவும், இவற்றை உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுத்து இது போன்று சம்வங்கள் இடம்பெறாதிருக்க ஏற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (201-86)

## தீவகம் தெற்கு பிரதேச சபை - வேலணை
## கேள்வி அறிவித்தல்

கீழ் காணும் சாதனங்களை வழங்குவதற்கான கூறுவிலை எம்மால் கோரப்படுகின்றன.

புதிய இழுவை வண்டியும் மூடிய இழுவைப் பெட்டியும் (Brand New Tractor with Covered Trailer)

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்கள் செயலாளர், பிரதேச சபை, வேலணை என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமும், அதன் பிரதியொன்று பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கும் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

சாதனங்கள் யாழ்ப்பாணத்தில் வைத்து கையேற்கப்படும். கேள்விப் பத்திரங்கள் 20.05.2009 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

22.05.2009 ஆம் திகதி பி.ப. 1 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அந் நேரம் கேள்விக்காரரோ அல்லது அவர் சார்பான பிரதி நிதியோ சமுகமளிக்கலாம்.

தீவகம் தெற்குப் பிரதேசசபை,
வேலணை.
12.05.2009

கைலாசபிள்ளை மகேந்திரலிங்கம்,
செயலாளர், தீவகம் தெற்குப்.பிரதேச சபை,
வேலணை.


Diploma Courses
01. Diploma in Microsoft Office
02. Diploma in Desk Top Publishing
03. Diploma in Internet Technology
04. Diploma in Hardware Technology
05. Diploma in Computer Programming
06. Diploma in Eng.Drawing & AutoCAD
07. Diploma in Computerized Accounting
08. Diploma in Audio & Video Editing
09. Diploma in Data Base Management-System.



IIS
கணனிக்கற்கை நெறிகளுக்கான
புதிய பிரிவுகள் ஆரம்பம்
பிரிவு 01. — 14.05.2009
பிரிவு 02. — 16.05.2009
காலை 10.00 மணி

Certificate Courses
01. Certificate in Auto CAD
02. Certificate in Java Programming
03. Certificate in Visual Basic Programming

INSTITUTE OF INFORMATICS STUDIES
#100, Clock Tower Road, Jaffna.
T.P.No : 021 222 2531 Fax : 021 222 6933


## உடன் தேவை

யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் வீதியில் அமைந்திருக்கும் கணனி பதிப்பகத்திற்கு தட்டெழுத்தாளர் தேவை.

தொடர்பு: 021 222 3603,
140, இராமநாதன் வீதி,
திருநெல்வேலி (85224)

## தவறிவிட்டது

நுணாவில் சந்தி, சாவகச்சேரி என்னும் முகவரியுடைய நவரட்ணராஜா சுகிதா என்பவரது தேசிய அடையாள அட்டை (835693791 V) விசேட அடையாள அட்டை மற்றும் தொழில் அடையாள அட்டை அடங்கிய பேர்ஸ் நுணாவில் சந்திக்கும், யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து அடையாள அட்டையை குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (85227)

# நோயாளர் எண்ணிக்கை அதிகரிக்கிறது

வடமராட்சி, மே 13

பருத்தித்துறை அரசினர் சுகாதார வைத்தியசாலையில் சிகிச்சை பெறவரும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

குறிப்பாக வன்னியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ள நெல்லியடி மத்திய மகா வித்தியாலய நலன்புரி நிலையத்தில் இருந்து அதிகமானோர் சிகிச்சைக்காக இவ் வைத்தியசாலைக்கு வருகின்றனர்.

இவ்வாறுசிகிச்சை பெறவந்த சிறுவர்கள் முதியோர்கள் உட்பட பலர் வாட்டுக்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (1-236)

# புத்தக தின நிகழ்வு

வடமராட்சி, மே 13

உலக புத்தக தினம், நூலகவாரம் ஆகியவற்றை முன்னிட்டு நூலக விழிப்புணர்வுக் கருத்தரங்கும் நூற்கண்காட்சியும் பருத்தித்துறை பிரதேச சபையின் புலோலி பொது நூல் நிலைய மண்டபத்தில் நளை வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெறவுள்ளன.

பருத்தித்துறை பிரதேசசபைச் செயலாளர் ச.சந்திரயோகன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு பாடசாலை மாணவர்கள், வாசகர்கள், நலன்விரும்பிகள் அழைக்கப்பட்டுள்ளனர்.

இக் கண்காட்சியின் போது வாசகர்களிடம் இருந்து நூல்களும் சேகரிக்கப்படும். (1-236)

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர் சுப்பர் கணபதிப்பிள்ளை
(ஓய்வுபெற்ற அதிபர்)

அமரர் கணபதிப்பிள்ளை கதிராசிப்பிள்ளை

| மனம் மகிழ | மனம் நெகிழ | மனம் மகிழ | மனம் நெகிழ |
|---|---|---|---|
| 24*08*1924 | 24*04*2008 | 12*04*1924 | 17*05*2008 |

எங்கள் அன்புத் தெய்வங்களே...
எம்மை ஆதரிப்பதற்கு ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
உங்கள் அன்பிற்கும் அரவணைப்பிற்கும் நிகராகுமா???
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து ஓராண்டென்ன ஓராயிரமாண்டு சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றென்றும் எமது செயல்களில் நிலைத்திருக்கும்...
உள்ளத்தில் அறிஞர் அண்ணா கையிலே பேனா என வாழ்ந்தார்
வாழ் நாள் முழுவதும் கலை, கல்வி, பொதுனலத்தொண்டென்று வாழ்ந்தார்
வறியோர்க்கும் அல்வையூருக்கும் வாரியிறைத்த வள்ளலானார்கள்...!
வல்வைக் கடலோரம் ஓர் கலையாக வாழ்ந்தார்
வாழும் நாளெல்லாம் தலைவணங்கா தமிழனுக்கு தன்மானக் கடமைதனை செய்தீர்கள்!
இத்தனைக்கும் மேலாய் பிள்ளைகளுக்கு பிரியமுள்ள பெற்றோராய்
மருமக்களின் மனதில் நிறைந்த மாமன் மாமியாய்
பேரப்பிள்ளைகளின் பேரன்புமிக்க தாத்தா பாட்டியாய் வாழ்ந்து
இன்று விதியின் விளையாட்டால் எம்விழிகளில் நீர் வழிய
உங்கள் கண்ணிமைகள் எங்களுக்குச் சொல்லாமல் மூடியதேன்!
அழிக்கமுடியாது சுகணாவின் புகழை அழிய நேர்ந்தாலே
அல்வையும் விதவை தான் ....!
தேனே தவழுறு தண்டமிழே அல்வை கண்ட தஞ்சையே
காலம் போற்றும் எம் சிந்தையே...!
காற்றைப்போல் சூரியனைப்போல் தமிழைப்போல் நீங்கள் இருவரும்
என்றும் எம் மனங்களில் நிலைஞ்ஞரே......!!!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னா இல்லம்,
அல்வாய்.

குடும்பத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்.வடமராட்சி இந்துமகளிர் கல்லூரியில் க.பொ.த (சா/த) பரீட்சை 2008இல் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆங்கில மொழிமூலம்

| | |
|---|---|
| மேனகா அரியநாயகம் | 8A,B |
| யாழினி கணேசலிங்கம் | 8A,B |
| அனுஷா சுந்தரலிங்கம் | 7A,B,C |
| கோகிலா செல்வவிநாயகம் | 6A,2B,C |
| கல்யாணி பரமஞானம் | 5A,B,2C |
| கிரிஜா சண்முகநாதன் | 3A,2B,2C,2S |

தமிழ்மொழி மூலம்

| | |
|---|---|
| அல்வினா ரசீகரன் | 8A,S |
| தர்மிலா சதாசிவம் | 7A,B,C |
| சங்கரி சண்முகலிங்கம் | 7A,B,S |
| ஜெயகௌரி பொன்னுத்துரை | 7A,B,S |
| கார்த்திகா யோகரட்ணம் | 6A,2B,S |
| சிவரூபி ஜெயராஜா | 6A,B,C,S |
| நிதர்சனா கணேசபாதம் | 6A,C,S |
| சோபிகா வேலும்மயிலும் | 4A,4B,C |
| ஜனனி மண்டலேஸ்வரன் | 5A,3C |
| நிரோஜா சிவராசா | 5A,2C,2S |
| மயூரி ஆனந்தவடிவேல் | 4A,2B,C,S |
| துவாரகா நாகநாதன் | 4A,B,2C,2S |
| லாவண்யா சிறீஸ்கந்தராசா | 4A,B,C,3S |
| சரண்யா நாராயணசாமி | 3A,2B,3C, S |
| தூர்க்கா ரகுநாதன் | 3A,4B,2S |
| துஸ்யந்தினி நாகராசா | 3A,2B,C,2S |
| தாட்சாயினி இராசநேரு | 3A,3B,2C,S |
| லக்சனா சச்சிதானந்தம் | 3A,2B,2C,S |
| மகாஜினி சிறீகாந்தா | 3A,3B,2C,S |
| சாயினி தர்மரட்ணம் | 3A,2B,2C,2S |
| கேஜினி செல்வச்சந்திரன் | 3A,B,C,3S |

மேற்படி மாணவர்களையும் அவர்களது கற்றலுக்கு உறுதுணையாக இருந்த அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி,
பருத்தித்துறை.
(சி/558543)

## யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்
### (நவோதயா பாடசாலை)

**க.பொ.த.உயர்தர அனுமதி - பிரிவு 2011**

மேற்படி அனுமதிக்கான கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகளுக்கான விண்ணப்ப முடிவுத்திகதி 25.05.2009 வரை நீடிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொண்டவர்களும் புதிதாக விண்ணப்பிக்க விரும்புபவர்களும் உடனடியாக விண்ணப்பங்களை அலுவலகத்தில் சமர்ப்பிக்கவும்.

வி.மாணிக்கம்
அதிபர்.
(சி/558544)

## துயர் பகிர்வு

எமது பாடசாலையின் ஆசிரியர் சி.பத்மராஜா
அவர்களின் பாசமிகு தந்தை

### வேலுப்பிள்ளை சின்னத்தம்பி

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரத்தில் பங்குகொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை நலன்புரிச் சங்கம்,
யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்.
(85222)

## மரண அறிவித்தல்
### ஆறுமுகம் இந்திரபுவனேஸ்வரி

கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் இந்திரபுவனேஸ்வரி நேற்று (12.05.2009) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - மனோன்மணி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஆறுமுகத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இந்திரராசா மற்றும் இராசசிங்கம் (நெல்லியடி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாலச்சந்திரன் (ஓய்வூதியர், மாநகரசபை, யாழ்ப்பாணம்), காலஞ் சென்ற குமாரசூரியர் ஆகியோரின் அன்புத்தயாரும், சிவமணிதேவி, சாந்தமலர், ஆகியோரின் அன்பு மாமியாரும், பாமினி (லண்டன்), பிரதாபன் (சிங்கப்பூர்), துசாந்திகா, தக்சன், சஜானி, மீரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சியாமினி, யாழினி, அபிரா, அனுஸ்பாலன், அஸ்னி ஆகியோரின் அன்புப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(13.05.2009) புதன்கிழமை மு.ப 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊத்தல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செ.இராசையா,
கைதடி வடக்கு, கைதடி.

தகவல்:
ஆ.பாலச்சந்திரன் (மகன்).
(85229)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முள்ளிவாய்க்கால் வைத்தியசாலை மீது நேற்று மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் கொல்லப்பட்டோர் மற்றும் காயமடைந்தோரைப் படங்களில் காணலாம்.

# ரெய்லரின் அதிரடியால் பெங்களூர் அபார வெற்றி; தொடர் தோல்வியைச் சந்திக்கும் கொல்கத்தா!

செஞ்சூரியன், மே 13

ஐ.பி.எல் ருவன்ரி - 20 போட்டித் தொடரில் நேற்றிரவு நடைபெற்ற ஆட்டங்களில் ஒன்றில் ரெய்லரின் அதிரடி ஆட்டம் கைகொடுக்க கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியை மண்கௌவச் செய்தது பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ்.

தென்னாபிரிக்காவில் நடைபெற்று வரும் இரண்டாவது ஐ.பி.எல். ருவன்ரி - 20 போட்டிகளில் 41 ஆவது ஆட்டம் நேற்று செஞ்சூரியனில் நடைபெற்றது. இவ் ஆட்டத்தில் மக்கலம் தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் கும்ளே தலைமையிலான பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ்அணியும் மோதின. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பெங்களூர் றோயல் சலஞ்சர் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா அணியின் ஆரம்பவீரர்களாக அணித் தலைவர் மக்கலமும் முன்னாள் அணித் தலைவர் கங்குலியும் களமிறங்கினர். கங்குலி 4 ஓட்டங்களுடன் வினய்குமாரின் பந்து வீச்சில் பௌச்சரிடம் பிடி கொடுத்து ஆட்டமிழக்க அடுத்து வந்த ஹோஸும் 7 ஓட்டங்களுடன் வினய்குமாரின் பந்தில் பௌச்சரிடம் பிடி கொடுத்து பெவிலியன் திரும்பினார்.



3ஆவது விக்கெட் ஜோடியாக மக்கலத்துடன் ஜோடிசேர்ந்த டேவிட் ஹஸி அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி 27 பந்துகளில் 3 பௌண்டறிகள் 2 சிக்ஸர்கள் அடங்கலாக 43 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். மத்தியூஸ் 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, ஷா 10 ஓட்டங்களைப் பெற தனது அபாரமான திறமையை வெளிப்படுத்திய மக்கலம் 64 பந்துகளில் 10 பௌண் டறிகள் 2சிக்ஸர்கள் அடங்கலாக 84 ஓட்டங்களைப் பெற்று இறுதி வரை களத்தில் இருந்தார்.

கொல்கத்தா அணி 20 ஓவர்கள் நிறைவில் 4விக்கெட்டுகளை இழந்து 174 ஓட்டங்களை பெங்களூர் அணிக்கு வெற்றி இலக் காக நிர்ணயித்தது.

பெங்களூர் சார்பில் பந்து வீசிய வினய்குமார் 33 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுகளையும் கும்ளே, அக்ஹில் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த பெங்களூர் றோயல் அணியின் ஆரம்ப வீரர்களான ரைடரும் கலிஸூம் சிறப்பான ஆரம்பத்தை வழங்கினர். அணி 58 ஓட்டங்களை பெற்றிருந்தவேளை கார்த்திக் வீசிய பந்தை எதிர் கொண்ட கலிஸ் (32) அதனை 'ஓஃப்' திசையில் அடித்தபோது மக்கலத்தின் அபாரமான பிடியெடுப்பால் ஆட்டமிழந்தார். பெங்களூர் 62 ஓட்டங்களைப் பெற்ற போது அஹார்கரின் பந்தை அடித் தாட முற்பட்ட ரைடர் (22) பின் எல்லைக் கோட்டருகே நின்ற கங்குலியால் பிடியெ டுக்கப்பட்டு பெவிலியன் அனுப்பப்பட்டார்.

அடுத்து வந்த உத்தப்பா 7ஓட்டங்களுடன் கார்த்திக்கின் பந்தில் வெளியேற, ரெய்லர் தனது அதிரடியான ஆட்டத்தினை வெளிப்படுத்தினார்.

கொல்கத்தா பந்து வீச்சாளர்களின் பந்துகளை நொறுக்கித் தள்ளிய ரெய்லர் 33 பந்துகளில் 7பௌண்டறிகள் 5 சிக்ஸர்கள் அடங்கலாக 81 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றார். ராவிட் 12 ஓட்டங்களைப் பெற்றவேளை மெண்டிஸின் பந்தில் அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழக்க பௌச்சர் ஆட்டமிழக்கா மல் 13 ஓட்டங்களை எடுத்தா.

19.2 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 176 ஓட்டங்களைப் பெற்று பெங்களூர் அபார வெற்றி பெற்றது. இதேவேளை இதுவரை கொல்கத்தா விளையாடிய 11 போட்டிகளில் 9 போட்டிகளில் தோல்வியைத் தழுவியுள்ளது.

போட்டியின் ஆட்டநாயகனாக அதிரடியாக ஓட்டங்களைக் குவித்து அணியின் வெற்றிக்கு வித்திட்ட ரெய்லர் தெரிவானார். (06)

## இன்றைய ஆட்டங்கள்

**முதலாவது ஆட்டம்**

அணிகள் : டெக்கான் சார்ஜர்ஸ் - டெல்லி டேர்டெவில்ஸ்
மைதானம் : டர்பன்
நேரம் : இரவு 8மணி

## ஐ.பி.எல். அணிகளின் தற்போதைய நிலை

| அணி | ஆட்டம் | வெற்றி | தோல்வி | சமனிலை | புள்ளிகள் |
|---|---|---|---|---|---|
| டெல்லி டேர்டெவில்ஸ் | 9 | 7 | 2 | 0 | 14 |
| சென்னை சுப்பர் கிங்ஸ் | 10 | 6 | 3 | 1 | 13 |
| டெக்கான் சார்ஜர்ஸ் | 10 | 6 | 4 | 0 | 12 |
| மும்பை இந்தியன்ஸ் | 11 | 5 | 5 | 1 | 11 |
| ராஜஸ்தான் றோயல்ஸ் | 11 | 5 | 5 | 1 | 11 |
| பெங்களூர் சலஞ்சர்ஸ் | 11 | 5 | 6 | 0 | 10 |
| கிங்ஸ் லெவன் பஞ்சாப் | 10 | 5 | 6 | 0 | 10 |
| கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 11 | 1 | 8 | 1 | 03 |

# களத்தடுப்பிலும் துடுப்பாட்டத்திலும் ஜொலித்தது மும்பை; 8 விக்கெட்டுக்களால் பஞ்சாப்பை வீழ்த்தி அசத்தியது

செஞ்சூரியன், மே 13

ஐ.பி.எல். ருவன்ரி-20 போட்டித் தொடரில் நேற்றிரவு நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் சிறப்பான களத்தடுப்பினாலும் டெண்டுல்கர் - பிராவோவின் அதிரடியாலும் 8 விக்கெட்டுகளால் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியிடம் முதலில் பெற்ற தோல்விக்கு பழிதீர்த்தது மும்பை இந்தியன்ஸ்.

தென்னாபிரிக்காவில் நடைபெற்று வரும் ஐ.பி.எல். ருவன்ரி - 20 போட்டித் தொடரின் 42 ஆவது ஆட்டத்தில் யுவராஜ் சிங் தலைமையிலான கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியும் சச்சின் டெண்டுல்கர் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியும் மோதின. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கிங்ஸ் லெவன் பஞ்சாப் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

பஞ்சாப் அணியின் வீரர்களை ஆரம்பம் முதலே தமது இறுக்கமான களத்தடுப்புக்குள் சிக்க வைத்தது மும்பை இந்தியன்ஸ். ஆரம்பவீரரான சொஹல் 23 பந்துகளை எதிர் கொண்டு 5 பௌண்டறிகள் 3 சிக்ஸர்களுடன் 43 ஓட்டங்களைப் பெற்றார். ஆனால், ஏனைய வீரர்களான ஹற்றிச், இர்பான் பதான், சாவ்லா ஆகியோர் ஓட்டம் எதனையும் பெறாமல் ஆட்டமிழந்தனர்.

சங்கக்கார (8), யுவராஜ் சிங்(12), வா மோற்றா(4), பொமேர்ஸ்வச் (5), பிரட்லீ (8) என ஆட்டமிழக்க ஹோல்(20), ஸ்ரீசந்த் (1) ஆகியோர் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

20 ஓவர்கள் நிறைவில் பஞ்சாப் அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 119 ஓட்டங்களைப் பெற்றது.

மும்பை சார்பில் பந்து வீசிய டுமினி 2 விக்கெட்டுக்களையும் மலிங்க, குல்குர்னி, ஹர்பஜன்சிங், ரஹானே ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

120 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலகுவான இலக்குடன் களமிறங்கிய மும்பை இந்தியன்ஸ் 16.2 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 122 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சனத்ஜெய்சூரியா 4 ஓட்டங்களுடனும் ரஹானே ஓர் ஓட்டத்துடனும் வெளியேற பிராவோ 59 பந்துகளில் 7 பௌண்டறிகள் 3 சிக்ஸர்களுடன் 70 ஓட்டங்களையும் டெண்டுல்கர் 29 பந்துகளில் 4 பௌண்டறிகள்ஒரு சிக்ஸருடன் 41 ஓட்டங்களையும் பெற்றனர்.

பஞ்சாப் சார்பில் பந்து வீசிய பிரட் லீ, சாவ்லா ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக ஒரு விக்கெட்டினையும் 2 பிடிகளையும் எடுத்து களத்தடுப்பில் ஜொலித்த ஹர்பஜன்சிங் தெரிவானார். (6)

# சானியாவுக்கு 92ஆவது இடம்

உலக ரென்னிஸ் வீரர்-வீராங்கனைகளின் தர வரிசைப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி ஆண்கள் ஒற்றையர் பிரிவில் ஸ்பெயின் வீரர் ரபெல் நடாலும், பெண்கள் ஒற்றையர் பிரிவில் ரஷ்ய வீராங்கனை டினரா ஷபனும் முதலிடம் வகிக்கின்றனர். இந்திய வீரர்களில் அவுஸ்திரேலிய ஓபன் ஜூனியர் சம்பியன் யுகி பாம்ப்ரி 175 இடங்கள் முன்னேறி 664ஆவது இடம்பிடித்துள்ளார். சோம்தேவ் வர்மன் 6 இடங்கள் முன்னேறி 140ஆவது இடம்பெற்றுள்ளார். பிரகாஷ் அமிர்தராஜ் 163ஆவது இடத்தில் இருக்கிறார். இரட்டையர் பிரிவில் லியாண்டர் பயஸ் 5ஆவது இடத்திலும், மகேஷ் பூபதி 9ஆவது இடத்திலும் உள்ளனர். பெண்கள் ஒற்றையர் பிரிவில் இந்திய வீராங்கனை சானியா 92ஆவது இடத்தி இருக்கிறார்.



# அவுஸ்திரேலியாவை வீழ்த்தியது இந்தியா

சீனாவில் நடைபெற்றுவரும் கதிர்மான் கிண்ணத்துக்கான போட்டித் தொடரில் அவுஸ்திரேலியாவை இந்தியா தோற்கடித்தது.

கதிர்மான் கிண்ணத்துக்கான பிரிவு-3 இறகுப்பந்துப்போட்டியில் அவுஸ்திரேலிய அணியைத் தோற்கடித்ததன் மூலம் அடுத்த சுற்றுக்கு இந்திய அணி முன்னேறியது.

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற இந்தப் போட்டியில் 4-1 என்ற கணக்கில் அவுஸ்திரேலியாவை இந்திய அணி தோற்கடித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நாவின் கவனத்தை ஈர்க்கும் பிரபாகரனின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்பவே சர்வதேச செய்தியாளர்கள் செயற்படுகின்றனர்



கொழும்பு, மே 13

ஐக்கிய நாடுகள் சபையின் கவனத்தை இலங்கைப் பிரச்சினையின் பக்கம் திருப்பி அச்சபையின் ஆதரவைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் காய் நகர்த்துகிறார் என்றும், பிரபாகரனின்இந்த நிகழ்ச்சித்திட்டத்துக்கு அமைவாக சர்வதேச ஊடகவியலாளர்கள் சிலர் செயற்படுகின்றனர் என்றும் அரசு குற்றம்சாட்டியுள்ளது.

சர்வதேச ஊடகவியலாளர்களின் இந்தச் செயற்பாடு நாட்டின் இறைமைக்குப் பாதகமாக அமைந்துள்ளது என்றும் இது போன்ற எல்லாவிதமான செயற்பாடுகளையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முறியடிப்பார் என்றும் அரசு தெரிவித்துள்ளது.

தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய பாதுகாப்பு பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

எமது படையினர் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டு ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்களைக் கொலை செய்தனர் என்றும் அத்தாக்குதலில் சுமார் ஆயிரத்து 600 பேர் காயமடைந்தனர் என்றும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தச் செய்தியில் எதுவித உண்மையுமில்லை. இது திரிபுபடுத்தப்பட்டிருக்கின்றது. தமிழ் நெற் இணையத்தளத்தில் வந்த செய்தியை ஆராய்ந்து பார்க்காமல் அப்படியே எடுத்து வெளிநாட்டு ஊடகங்கள் பிரசுரித்திருக்கின்றன.

வெளிநாட்டு ஊடகவியலாளர்களின் இந்தச் செயற்பாடு தொடர்பில் நாம் மிகுந்த கவலை அடைகின்றோம். புலிகளின் தலைவர் பிரபாகரனின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகவே இவர்கள் செயற்படுகின்றனர்.

இலங்கைப் பிரச்சினையின்பால் ஐக்கிய நாடுகள் சபையின் கவனத்தைத் திருப்பி அதனூடாக ஐக்கிய நாடுகள் சபையின் ஆதரவைப் பெறுவதே பிரபாகரனின் தற்போதைய நிகழ்ச்சிநிரல். இந்த நிகழ்ச்சி நிரலுக்கு சர்வதேச ஊடகவியலாளர்கள் துணை போகின்றனர்.

எமது படையினர் இப்போது முல்லைத்தீவில் புலிகளின் இறுதி இடத்தையும் நெருங்கிவிட்டனர். அதற்குள் சிக்கியுள்ள பிரபாகரனைக் காப்பாற்றச் சிலர் முயற்சி செய்கின்றனர். அந்த முயற்சியில் ஒன்றுதான் ஆயிரத்துக்கு மேற்பட்ட அப்பாவி மக்களைப் படையினர் ஷெல் தாக்குதல்கள் மூலம் கொன்றனர் என்ற பொய்ச் செய்தி.

தற்போது எமது நாட்டில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுகின்றன என்று கூறிக்கொண்டு அது தொடர்பாக விளக்கமளிப்பதற்காக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் செய்துள்ளார். இதன்மூலம் அவர் பிரபாகரனின் நிகழ்ச்சிநிரலின் பங்காளியாக மாறிவிட்டார்.

எமது நாட்டின் இறைமைக்கு எதிராக எப்படிப்பட்ட சக்திகள் செயற்பட்டாலும் எமது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவற்றையெல்லாம் முறியடிப்பார் - என்றார். அமைச்சர் ரம்புக்வெல. (அ-சி)

## உதவிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரி ஒருவர் இத்தகவலை நேற்றிரவு வெளியிட்டுள்ளார்.

உலக உணவுத் திட்டத்தின் 25 மெற்றிக் தொன் நிவாரணப் பொருள்களை திருகோணமலையில் ஏற்றிக்கொண்டு கப்பல் ஒன்று செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் அனுசரணையுடன் முல்லைத்தீவுக்குச் சென்றது.

அங்கு இடம்பெறும்கடும் சண்டை காரணமாக பொருள்களை இறக்க முடியாத் நிலையில் அக்கப்பல் திருகோணமலைக்குத் திரும்பிக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதியில் உதவிப் பொருள்களை வழங்கவும், அங்கிருந்து பொதுமக்களை வெளியேற்றவும், தாங்கள் எடுத்த முயற்சியை, அந்தப் பகுதியில் நடக்கும் கடும் சண்டை காரணமாக, தற்காலிகமாக கைவிடுவதாக, செஞ்சிலுவைச் சங்கம் கூறுகிறது.

உதவிப் பணியாளர்களுடன் சென்ற ஒரு கப்பல், அந்தப் பகுதியின் கடற்பரப்பல் காத்துக்கிடந்ததாகவும், பின்னர் அது புறப்பட்ட இடமான, திருமலைத் துறைமுகத்துக்கே திரும்பக்கொண்டிருப்பதாகவும் செஞ்சிலுவைச் சங்கத்துக்காகப் பேசவல்ல ஒருவர் தெரிவித்துள்ளார். மீண்டும் அந்தக் கப்பல் இன்று இந்த மோதல் நடக்கும் பகுதிக்கு திரும்ப வர முயலும் என்றும் அவர் மேலும் கூறினார். (அ-1)

## சர்வதேசம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளனர் எனத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

வன்னியில் இனப்படுகொலை இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது. ஆனால் சர்வதேசம் மௌனமாக இருக்கின்றது. எங்களுக்கு அறிக்கைகள் வேண்டாம். மக்கள் கொல்லப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். அதுதான் எமது அவசர கோரிக்கை என்று சம்பந்தன் தெரிவித்தார். அரசின் இனப்படுகொலை நடவடிக்கைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இரா.சம்பந்தன் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

அரசபடையினர் நான் வன்னியில் மக்களைத் தினமும் கொலைசெய்து வருகின்றனர். கனரக ஆயுதங்களைப் பாவித்துப் படையினர் மக்களைக் கொலைசெய்து வருகின்றனர். அதில் எந்தவிதமான சந்தேகங்களும் இல்லை. முள்ளிவாய்க்காலில் தற்காலிக வைத்தியசாலை கூட பல தடவைகள் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது. வைத்தியர்கள், மருத்துவப் பணியாளர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர், காயமடைந்திருக்கின்றனர்.

வன்னியில் யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் எமது நடாளுமன்ற உறுப்பினர் கனகரட்ணம் மக்களுடன் அங்கிருக்கின்றார். அவர் எம்முடன் தொடர்புகொண்டு மக்களின் அவல நிலைமைகள் குறித்துத் தகவல் தருவார். அத்துடன் முள்ளிவாய்க்கால் தற்காலிக வைத்தியசாலையின் வைத்தியர் மக்கள் தினமும் கொல்லப்படுவது குறித்து தகவல்களைத் தருகின்றார்.

### சாட்சிகள் இல்லாமல் கொலைகள் நடத்தப்படுகின்றன

வன்னியில் ஐக்கிய நாடுகள் சபையின் முகவர் நிறுவனங்கள் எதுவும் இல்லை. சர்வதேச தொண்டு நிறுவனங்கள் எதுவும் இல்லை. ஊடகவியலாளர்களும் செல்லமுடியாது. இதனால் மக்கள் படையினரின் தாக்குதல்களில் கொல்லப்படுவதற்கு சாட்சிகள் எதுவும் இல்லை. இந்த ஒரு நிலையில்தான் வன்னியில் பொதுமக்கள் எவரும் கொல்லப்படவில்லை என்று அரசு பொய்ப்பிரச்சாரம் செய்கின்றது.

படையினரின் ஷெல் தாக்குதல்களில் கொல்லப்பட்ட மக்களின் உடல்கள் வீதிகளில், பதுங்கு குழிகளில் சிதறிக் கிடக்கின்றன. காயமடைந்தவர்களை வைத்தியசாலைக்கு எடுத்துவர முடியாத நிலை. அப்படி எடுத்து வந்தாலும் வைத்தியசாலையில் போதிய மருந்துகள் இல்லை.

### உணவு, மருந்து கொண்டு செல்ல முடியாது தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன

மருந்துப் பொருள்களையும் உணவுப் பொருள்களையும் கொண்டுசெல்லவிடாது தடுத்து தாக்குதல்களையும் நடத்தி மக்களை அரசு கொலைசெய்கின்றது. இதுதான் உண்மை நிலை. இன்னும் அடுத்த சில நாள்களில் மிகவும் மோசமான முறையில் மக்கள் படுகொலைசெய்யப்படலாம். ஆகவேதான் அரசின் திட்டமிட்ட இந்தக் கொலையை நிறுத்துங்கள் என்று சர்வதேசத்திடம் கேட்கின்றோம் - என்றார்.

இங்கு விளக்கமளித்த சுரேஸ்பிரேமச்சந்திரன், இந்தியா உட்பட சர்வதேச நாடுகள் ஏன் மௌனம் காக்கின்றன என்று கேள்வி எழுப்பியதுடன் அரசின் தமிழ் இனப்படுகொலை நடவடிக்கைகளுக்கு துணை போகின்றீர்களா எனவும் கேள்வி எழுப்பினார்.

கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஸ்பிரேமச்சந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், என். சிறிகாந்தா, சிறில், மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான அரியநேத்திரன், தங்கேஸ்வரி, கனகசபை, திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம், அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களானான பத்மநாதன், சந்திரகாந்தன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-சி

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்னும் 48 மணித்தியாலத்தில் பாரிய மாற்றம் ஒன்றினை காணமுடியும். எதிர்வரும் 48 மணித்தியாலங்களுள் தமிழீழ விடுதலைப் புலிகளின் எதிர்த்தாக்குதல் இயலுமையை முற்றாக நிறுத்தி அவர்களை வலுவிழக்கச் செய்து விட முடியும். அத்துடன் தற்போது முன்னெடுக்கத் தீர்மானித்திருக்கும் உத்தேச இராணுவ முன்னெடுப்புகள் கடந்த 20 ஆம் திகதி விடுதலைப்புலிகளின் மண் அரண்களைத் தகர்த்து பொதுமக்களை மீட்ட நடவடிக்கையை ஒத்ததாக அமையும் - என்றும் தெரிவித்தார். (அ)

## அரச படைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிடிக்குமாறு ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்துகிறது.

இலங்கை அரச படையினர் கன ரக ஆயுதங்களைப் பாவிக்கின்றனர் இதுவே பொதுமக்களின் உயிரிழப்புக்குக் காரணமாக உள்ளது.

அதேபோல் தமிழீழ விடுதலைப் புலிகள் 50 ஆயிரம் பொதுமக்களை அவர்களின் விருப்பத்திற்கெதிராக மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்துகின்றனர்.

அப்பகுதியிலுள்ள மக்களுக்குப் போதிய உணவுப் பொருள்கள், மருந்துப் பொருள்கள் இல்லாமையினால் அவர்கள் அபாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

## கரையான் முள்ளி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யசாலையில் சேர்க்கப்பட்டனர் என்றும் படைத்தரப்புச் செய்திகள் கூறின.

இந்த மூன்று தற்கொலைத் தாக்குதல்களும் மூன்று மணி நேரத்திற்குள் நடத்தப்பட்டன எனப் படைத்தரப்புச் செய்தியில் கூறப்பட்டது.

விடுதலைப் புலிகளின் தற்கொலையாளிகள் பதுங்குகுழிகளுக்குளிருந்த வண்ணம் பாரிய வெடிபொருள்களை வெடிக்கவைத்து தற்கொலை செய்கின்றனர்.

இத்தாக்குதல்களில் விடுதலைப் புலிகளில் 10 உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர். அவர்களுடைய சடலங்களைப் படையினர் மீட்டனர் என்றும் படைத்தரப்பில் கூறப்பட்டது.

## தமிழகத்திலும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்நாட்டிலுள்ள 39 தொகுதிகளுக்கும் மற்றும் புதுவையில் ஒரு தொகுதிக்கும் ஒரே நாளில் வாக்குப் பதிவு நடை பெறுகிறது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை அ.தி.மு.க. தலைமையில் பா.ம.க., ம.தி.மு.க., இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஆகிய கட்சிகள் இணைந்து வலுவான கூட்டணியை அமைத்துள்ளன. இதில் அ.தி.மு.க. 23 இடங்களிலும், பா.ம.க. 7 இடங்களிலும், ம.தி.மு.க. 4 இடங்களிலும், மார்க்சிஸ்ட் மற்றும் இந்தியக்கம் யூனிஸ்ட் கட்சிகள் தலா 3 இடங்களிலும் போட்டியிடுகின்றன.

தி.மு.க. தலைமையில் காங்கிரஸ், விடுதலைச் சிறுத்தைகள் மற்றும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகள் கூட்டணி அமைத்துள்ளன. இதில் தி.மு.க. 21 இடங்களிலும், காங்கிரஸ் 16 இடங்களி லும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி இரண்டு இடங்களிலும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி ஒரு இடத்திலும் போட்டியிடுகின்றன.

## கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேகத்தின் பேரில் 6 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என வெள்ளவத்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டனர்.

குறித்த இளைஞர்கள் வெள்ளவத்தை பகுதியில் தங்கியுள்ளமைக்கான உரிய காரணங்களை கூறவில்லை என பொலிஸார் குறிப்பட்டனர்.

இதேவேளை, களுபோவில, நுகேகொட மற்றும் மொறட்டுவ சுற்றுப்புறங்களில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற தேடுதல் நடவடிக்கையின்போது 7 தமிழ் இளைஞர்கள் கைது செய்யபட்டுள்ளனர். மேலும் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

படையினரும் பொலிஸாரும் நடத்திய தேடுதலில் வாகனங்களும் வழிமறிக்கப்பட்டு சோதனையிடப்பட்டன. வீதியால் சென்றவர்களும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் தொடர்ந்து பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வெள்ளவத்தை பொலிஸார் தெரிவித்தனர்.

## ஆஸ்பத்திரி மீதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இம்மாதம் 2ஆம் திகதி இதே தற்காலிக ஆஸ்பத்திரி மீதே நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் அங்கு சிகிச்சைக்காகத் தங்கியிருந்த 64 பொதுமக்கள் பலியாகினர் என்பது தெரிந்ததே.

அன்றைய தாக்குதலில் காயமுற்று சிகிச்சை பெற்று வந்தவர்களும் நேற்றைய ஷெல் தாக்குதலில் பலியானார்கள் என்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை இந்தத் தாக்குதல் குறித்து தமக்கு எதுவுமே தெரியாது என் றும் அந்தப் பகுதியில் தாம் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தவில்லை என்றும் இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை (10ஆம் திகதி) தொடக்கம் தொடர்ந்து 3நாள்களாக புதிய பாதுகாப்பு வலயத்தில் கடும் சண்டை நடைபெற்று வருகிறது.

கடந்த சனிக்கிழமை இரவு தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை காலை வரை தொடர்ந்து நடத்தப்பட்ட ஷெல் மற்றும் விமானத் தாக்குதல்களில் ஆயிரத்துக்கும் அதிமானோர் பலியாகினர் என்று செய்திகள் வெளியாகி இருந்த நிலையில் -

நேற்றுக் காலை 7.30 மணியளவில் முள்ளி வாய்க்கால் தற்காலிக ஆஸ்பத்திரியில் நோயாளரை அனுமதிக்கும் வார்ட் மீது மோட்டார் ஷெல் வந்து தாக்கியதாக டாக்டர் வரதராஜா ஏ.பி. செய்தி நிறுவனத் திற்குத் தெரிவித்திருந்தார்.

அந்தத் தகவலை மற்றும் இரு ஆஸ்பத்திரி அலுவலர்களும் உறுதிப்படுத்தினர். எனினும் அவர்கள் தமது பெயர்களை வெளிப்படுத்த வேண்டாம் என்று ஏ.பி யின் செய்தியாளரிடம் கேட்டிருந்தனர்.

தகரக் கூரையையும் நீலநிற தறப்பாள்களை மறைக்கும் சுவர்களாகவும் கொண்டிருந்த நோயாளரை அனுமதிக்கும் அந்த வார்ட் சுக்குநூறாகியது.

ஷெல் தாக்குதலுக்கான வார்ட்டின் அருகே இறந்தவர்களின் சடலங்கள் சேற்றில் விழுந்து கிடந்தன. தாக்குதலின் பின்னர் எடுக்கப்பட்ட புகைப்படங்களில் சுமார் 2டசின் சடலங்கள் சேற்றுப் பாங்கான நிலத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருந்ததை காண முடிந்ததாகவும் ஏ.பி. செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஷெல் தாக்குதல்களின் காரணமாக குறுகிய பிரதேசத்திற்குள் எங்கு சென்று தப்புவது என்று திக்குத் தெரியாமல் மக்கள் நாலா பக்கமும் ஓடி ஓடி அலைவதாக விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பேச்சாளர் சீவரத் தினம் புலித்தேவன் குற்றஞ்சாட்டியதாகவும் ஏ.பி. செய்தியாளர் கூறியுள்ளார். (அ)


## தொழிற் பயிற்சிகள்

மத்திய கிழக்கு நாடுகள், ஐரோப்பிய நாடுகளில் தொழில்நுட்பத்துறையில் வேலைவாய்ப்புப் பெறுவதற்கும் உள்நாட்டில் சுயமாக வேலைவாய்ப்புப் பெறுவதற்கும் ஏற்ற முறையில் அதிகூடிய நேர செய்முறைப் பயிற்சியளிக்கப்பட்டு சான்றிதழும் வழங்கப்படும்.

★ ஏயர் கொண்டிசனிங்
சகல குளிர்சாதனங்களும் இயங்கும் முறை: திருத்தப்படும் முறை பயிற்சியளிக்கப்படும். காலம்: 6 மாதம்

★ றேடியோ ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங்
றேடியோ CD Player Amplifier
ரெலிவிசன் DVD Player Video Deck ஆகியன பயிற்சியளிக்கப்படும். காலம்: 10 மாதம்

★ எலக்றிக்கல் வயரிங், றீவைண்டிங், வீட்டு மின்சார வேலை, மின் மோட்டர், மின்விசிறி, ரான்ஸ்போமர் றீவைண்டிங் செய்தல் பயிற்சியளிக்கப்படும். காலம்: 6 மாதம்

★ Mobile Phone Repairing, Hard ware, Soft ware, Hard ware Repairing, Phone Lock பயிற்சியளிக்கப்படும். காலம்: 2 மாதம்

★ Dip.in Computer Hard ware Engineering காலம்: 3 மாதம்

புதிய பயிற்சிகள் ஆரம்பம்: 15.05.2009; 16.05.2009
O/L படித்தவர்கள் அனுமதிக்கப்படுவர்.

விவரங்களுக்கு:
Jaffna Technical Institute
No.45, Clock Tower Road, Jaffna
T.P. 222 6434, 0718561654, 0779254078

## பிரத்தியேக வகுப்புக்கள்

2009ஆண்டு G.C.E(O/L)
பரீட்சைக்குத்தோற்றும் மாணவர்களிற்கு
கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம்
கற்பிக்கப்படும்.
ஆரம்பம்16.05.2009 சனி 10 A.M
சேர விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.
ஆசிரியர்.M.சிவநாதன்
விபரங்களிற்கு: Jaffna Technical Institute
No.45, clock Tower Road, Jaffna.
T.P 222 6434, 0777974874З

ஆசிரியர்
K.S.இளங்கோ
கருத்தரங்கு -A/L 2009
நாளை 14.05.2009
காலை 9 மணி
D.M.I
நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.05.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.